விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | தை 12 | செவ்வாய்க்கிழமை (25.01.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 37

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்து

# அரசாங்கத்தின் பதிலுடன் நோர்வேக் குழு வன்னிக்கு

## சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நேற்று நீண்ட நேரம் ஆராய்வு



(கிளிநொச்சி)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு சர்வதேச சமூகம் வழங்கிவரும் உதவிகளை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பொதுவான ஒரு கட்டமைப்பின் கீழ் பகிர்ந்துகொள்வது தொடர்பான அரசாங்கத்தின் பதிலுடன் நோர்வேக் குழு நேற்று வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் நீண்டநேரமாக ஆராய்ந்திருக்கிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் நேற்றிரவு தமிழ் இளைஞர் மீது சூடு

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் நேற்றிரவு தமிழ் இளைஞர் ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் சுடப்பட்டுள்ளார்.

நேற்றிரவு பத்து மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் 32 வயதுடைய ஜெகன் என்பவரே சூட்டுக் காயங்களுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர் மொறட்டுவப் பகுதியைச் சேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. மிகவும் ஆபத்தான நிலையில் உயிருக்குப் போராடிக்கொண்டிருப்பதாக நள்ளிரவுக்கு முன்னர் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (த)

## அரசு - புலிகள் தரப்பு இணைந்த கூட்டுக் கூட்டமைப்பு தேவை

### பிரதமரிடம் நோர்வே வலியுறுத்து

(கொழும்பு)

கடற்கோளினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு வழங்கப்படும் வெளிநாட்டு உதவிகள் இவ் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கும் சென்றடையும் வகையில் அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் இணைந்து ஒரு கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என நோர்வே தரப்பினர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நோர்வே வெளிநாட்டமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான நோர்வேத் தூதுக் குழுவினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை பிரதமரை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையில் சந்தித்துப் பேசியதுடன் தங்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் பிரதிநிதிகள் புலிகளுடன் பேச்சு

மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறையினருக்கும் முஸ்லிம் பள்ளிவாசல்களின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளின் கொக்கட்டிச்சோலை அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், பொருண்மிய பொறுப்பாளர் சலீம், மட்டக்களப்பு நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் அன்புமாறன், பட்டிருப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் பிரதிநிதிகள் சார்பில் பள்ளிவாசல்களின் தலைவர் அப்துல் ஜவான் தலைமையிலான பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் முஸ்லிம்கள் தமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் தமது சொந்தக்காணிகளில் மீள்குடியமர்வ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் போராளி வீரச்சாவு

(துன்னாலை)

விசுவமடுவில் கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

துன்னாலை மேற்கை வதிவிடமாகக் கொண்ட வீரவேங்கை இறையவன் (சந்திரவதனன் கமலேஸ்வரன், திருகோண

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தோனேசியாவில் பூமியதிர்ச்சி

(யகார்த்தா)

இந்தோனேஷியாவிலும் அந்தமானின் கிரேட்டர் நிக்கோபார் தீவுகளிலும் காலை பெரும் நில நடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் இது 6.5 ஆகப் பதிவானது. இதன் எதிரொலியாக சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் நில அதிர்வு ஏற்பட்டது.

சென்னையில் நேற்றுக் காலை 9.47 மணியளவில் நில அதிர்வு ஏற்பட்டது.

பல பகுதிகளிலும் இந்த நில அதிர்வு உணரப்பட்டதையடுத்து மக்கள் வீடுகளையும் கட்டடங்களையும் விட்டு அலறியபடி வெளியேறினர்.

டிசம்பர் 26ம்தேதி இந்தோனேசியாவின் சுமத்ரா தீவுகளில் ஏற்பட்ட மிகப் பெரிய பூகம்பம் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமி அலைத் தாக்குதலுக்குப் பிறகு அந்தமான் தீவுகளில் 100க்கும் மேற்பட்ட நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

இதில் நேற்று மிக சக்தி வாய்ந்த நில அதிர்வு ஏற்பட்டது. இந் நில அதிர்வினால் இந்தோனேசியாவில் ஒருவர் பலியாகியுள்ளார். வீடுகள் பல சேதமடைந்துள்ளன. பௌணர்மி தினமான கடந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)



## தேர்தலை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைப்பது ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் செயல்

### ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும். தேர்தல்கள் ஒத்திவைப்பது ஜனநாயகத்திற்கும், நாட்டிற்கும் பங்கம் விளைவிக்கும் செயலாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வாரியபொலவில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தலை ஐந்து வருடங்களுக்கு பிற்போடப்படுவது தொடர்பான ஜனாதிபதியின் கருத்துக்கள் எமக்குக் கவலையளிக்கிறது. சகலரும் ஒன்றிணைந்து அடுத்த 6 மாத காலத்துக்குள் நாட்டை மீளக்கட்டியெழுப்பி மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு முயற்சிக்கவேண்டும். அதைவிடுத்து,

அரசியல் பலத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் செயற்திட்டத்தை ஐந்து ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் இடமளிக்காது.

எவ்வாறாயினும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

சுனாமிப் பேரனர்த்தத்தைப் பயன்படுத்தி ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கமுடியாது.

சுனாமியினால் நாட்டுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக வழங்கப்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(கு-8)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ்ப் பிரதேசங்களைக் கட்டியெழுப்புவதில் ஜனாதிபதி பாரபட்சம் காட்டிவருகிறார்

## தொடரும் புறக்கணிப்புகள் குறித்து ரவி.எம்.பி. வேதனை

(தென்மராட்சி)

**சுனாமி அனர்த்தத்தினால் நமது நாட்டில் அம்பாறை மாவட்டத்தில் தான் அதி கூடிய இழப்புக்களும், சேதங்களும் இடம்பெற்றிருந்த போதிலும், மிகவும் குறைந்த பட்ச பாதிப்புக்கள் கொண்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஜனாதிபதி புனரமைப்புப் பணிகளுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்துவருவதன் மூலம் ஜனாதிபதி தமிழ்ப் பிரதேசங்கள் மீது தொடர்ந்தும் பாரபட்சம் காட்டிவருவதைக்காண முடிகிறது. இது மிகுந்த வேதனை தருவதாகவுள்ளது.**



இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைபபின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான ந.ரவிராஜ், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கடந்த சனியன்று இடம்பெற்ற, சாவகச்சேரி கைத்தொழில வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

வணிகர் மன்றத்தின் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் முந்நூறுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பங்கு கொண்டிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

இரண்டாயிரமாம் ஆண்டில் சாவகச்சேரியில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக அழிக்கப்பட்ட சாவகச்சேரி நகரத்தை மீளவும் கட்டியெழுப்பும் பணியில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் அபாரமான பங்களிப்பைச் செய்துள்ளமை பாராட்டப்படவேண்டியதாகும். அரசாங்கம் எத்தகைய உதவிகளையும் செய்யாமல் இருந்த போதிலும் கூட வர்த்தகர்கள் மிகவும் முனைப்புடன் பணியாற்றி அழிந்த நகரத்துக்கு மீளவும் புத்துயிர் அளித்துள்ளனர்.

மேலும் யுத்தத்தின் காரணமாக முழுமையாகச் சேமடைந்த சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையை ஜப்பான் 330 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்வதற்கு கொள்கை ரீதியில் ஒப்புக்கொண்டுள்ள போதிலும் கூட சமாதான முறைமைகள் நிலையான தன்மைக்குவராமையினால் வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படாமல் இருந்து வருகின்றது.

எனவே, நாட்டில் நிரந்தரமான சமாதானம் ஏற்படாதவரை சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையைப் புனரமைப்பதற்கு ஜப்பான் சம்மதிக்கமாட்டாது. மேலும் சுனாமியின் காரணமாக முற்றாக அழிக்கப்பட்ட மாமுனைக் கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் குறித்து நான் பலமுனைகளில் முயற்சி செய்து வருகின்றேன் என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் இறுதியாக அமரர் நமசிவாயம் நினைவாக பன்னிரண்டு பாடசாலை மாணவர்களுக்கு கல்விப் புலமைப்பரிசில் திட்ட நிதி வழங்கி வைக்கப்பட்டது. (ப-16)

## திறப்பு விழா

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டையூர் அமரர் திருமதி கனகசபை சிவக்கொழுந்துவின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட விநாயகர் சனசமூக நிலையமும் முன்பள்ளியும் இன்று நண்பகல் 12.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

நிலையத் தலைவர் சி.தெட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறும் இத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக மானிப்பாய் உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ப-72)

## இராசி பலன்

**25.01.2005**
**(தை 12 செவ்வாய்க்கிழமை)**
**பூரணை பிற்பகல் 4.47 மணிவரை**
**பூசம் பின்னிரவு 02.48 மணிவரை**
**இராகுகாலம் 3.36 - 05.06 மணிவரை**
**சுபநேரம் 09.06 - 12.36 மணிவரை**
**பூரணைவிரதம்**
**தைபூசம்**

**மேடம்** தெய்வ சிந்தை, தொழிலில் ஆர்வம் , காரிய அனுகூலம், நல்ல முயற்சி.

**இடபம்** சுபசெலவு, பிரயாணம், ஆரோக்கியக் குறைவு, எடுத்தகாரியம் தாமதமாகும்.

**மிதுனம்** தொழில் முன்னேற்றம், புதியபொருள் சேர்க்கை, கீர்த்தி , நல்ல காரியம்.

**கடகம்** நண்பர்கள் உதவி, சுவாரஸ்யம், உற்சாகம், காரிய அனுகூலம்.

**சிங்கம்** சரீரப்பிரயாசை, தேசாந்திரவாசம், புதியதிட்டமிடல், அமைதிக்குறைவு.

**கன்னி** காரிய தடங்கல், மனக்கிலேசம், ஆரோக்கியக் குறைவு, போசன நன்மை.

**துலாம்** உறவினர் வருகை, காரியநன்மை, நல்லசம்பவம், விருந்துபசாரம்.

**விருச்சிகம்** பிரயாண சுகம், உடல் நலம், எடுத்தகருமங்கள் கைகூடும், கௌவரவமான நிலை.

**தனுசு** முயற்சி தாமதம், உறவினர் மனஸ்தாபம், போசன சுகக்குறைவு, வியாபாரவிருத்தி.

**மகரம்** புதிய செய்தி, தொழிலில் ஆர்வம், காரிய தாமதம், சயன சுகக்குறைவு.

**கும்பம்** செல்வாக்கு, தொழில் நன்மை, நல்லசெய்தி, நல்ல வருமானம்.

**மீனம்** அதிகசெலவு, காரியதாமதம், நிலைமாற்றம், விவாதம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்


**31ம் நாள் நினைவலை**
**வரம் பெற்றீர்கள்**

லோ. நிஷாளினி — அன்னை மடியில் 1999 — 05 — 02



லோ. கௌரி — அன்னை மடியில் 2002 — 01 — 01

**கடல் அன்னையின் சீற்றத்தில்**
**2004.12.26**

அன்னை வயிற்றிலும் ஒன்றாய்
ஆடிப் பாடும் இடத்திலும் ஒன்றாய்
கல்வி கற்கும் இடத்திலும் ஒன்றாய்
செல்லும் இடம் எல்லாம் ஒன்றாய்
கடல் அலை பொங்கி வரும் பொழுதும் ஒன்றாய்
கடவுள் கையில் சேரும் போதும் ஒன்றாய்
எம்மை விட்டுப்பிரியும் போதும் ஒன்றாய்
உங்களை நினைப்பவர் நெஞ்சில்
நிலைப்பீர்கள் ஒன்றாய்

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C/9246)


## யுத்தத்தால் சேதமான கூட்டுறவுச் சங்கங்களை புனரமைக்க நடவடிக்கை

(தென்மராட்சி)

சாவகச்சேரியில் 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக சேதமடைந்த நிலையில் இருந்த ஐந்து கூட்டுறவுச் சங்கக் கிளைகளை சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் எட்டு இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ் சங்கத்தானை, கல்வயல், கைதடி, நுணாவில் மற்றும் சாவகச்சேரி கிளைகள் புனரமைக்கப்பட்டுள்ளன என்றும மட்டுவில் தெற்கு சோமஸ்கந்தா கிளையின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் பொது முகாமையாளர் க.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இதற்கான நிதியை யாழ்.மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அரசின் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழங்கியதாகவும் தெரியவருகின்றது. (ப-16)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் மீனபிடியியல் விஞ்ஞான டிப்ளோமா வைப் பயின்ற மாணவர்களுக் கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று மு.ப.10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கடல் வள அபிவிருத்தி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. எனவே அனைத்து மாணவர்களையும் இக் கலந்துரை யாடலில் தவறாது கலந்து கொள் ளுமாறு நீர் உயிர் வள ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (க)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்கான கோதுமை மா விநியோகம் சம்பந்தமாக யாழ்.செயலகத்தில் இன்று மு.ப.10.00 மணிக்கு யாழ்.மேல திக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் விசேட கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் யாழ்.குடா நாட்டுக்கு மா விநியோகம் செய் யும் நிறுவனங்களும் மற்றும் செய லக உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-5)


நிறைஞ்சனாஸ்
சங்கானை
இன்று முதல்
விஸ்வ துளசி

ராஜா
யாழ்ப்பாணம்
சரத்குமார், நயன்தரா வடிவேல் நடித்த




கா.நேரம் 10.30,2.30,6.30,9.30 (பு.நே)

நாதன்ஸ்
(யாழ்ப்பாணம்)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு (குளிரூட்டப்பட்டது)
பிரசாந், சினேகா, வடிவேல், ஜனகராஜ் இன்னும் பலர் நடித்த




2 வது வசூல் வெற்றி வாரம்
பு.நேரம் 10.30,2.30,6.30,9.30

மனோகரா திரையரங்கு
யாழ்ப்பாணம்
இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு




கா.நே- 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

## இன்று ஒரு தகவல்

# வீதிப் பாதுகாப்பு

எனக்குத் தெரிந்த ஒருவர் ஸ்கூட்டர் வைத்திருக்கிறார். ஒவ்வொரு நாளும் அதை எடுத்துக்கொண்டு வெளியே கிளம்பும் போதும் ஒரு எலுமிச்சம் பழத்தை அதன் சக்கரத்தினடியில் வைத்து காவு கொடுத்து விட்டுத் தான் புறப்படுவார் அப்படி ஒரு நம்பிக்கை.

''எதற்கு சார் இப்படிச் செய்கிறீர்கள்?'' என்று கேட்டேன். என்ன சார் விபரம் புரியாத ஆளாக இருக்கிறீர்கள்? இந்தக் காலத்தில் ஒரு வாகனத்தை எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பினால்... திரும்பிவரும் வரைக்கும் விபத்து ஏதுமில்லாமல் வந்து சேர வேண்டுமே? அதற்காகத்தான் இப்படிச் செய்கிறேன் என்றார். இப்படிக் கூறிவிட்டு ஹெல்மெட்டை எடுத்துத் தலையில் கவிழ்த்துக் கொண்டு போய் விட்டார்.

அவர் அப்படி நினைப்பதில் தவறில்லை. நாகரிகம் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. போக்குவரத்தும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. அதே வேகத்தில் வீதியின் அகலமும் வசதியும் அதிகரிக்கின்றனவா? இல்லையே! 10 பேர் நடந்து கொண்டிருந்த அதே வீதியில் 100 பேர் நடந்தால் ஒருவருக்கொருவர் **Sorry** சொல்லிக் கொண்டு தான் போக வேண்டியிருக்கும். வேறு வழி இல்லை இதே வேகத்தில் போய்க் கொண்டிருந்தால் இனிமேல் நடப்பவர்களும் ஹெல்மெட் போடவேண்டுமென்று சட்டம் வந்தாலும் வரும்.

சாலை வசதி அதிகரிக்க வேண்டும். மக்கள் தொகை குறைய வேண்டும். தேவையற்ற பயணங்களையும் குறைக்க வேண்டும். இதெல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும் இப்போதுள்ள நிலமையில் முக்கியமாக நாம் செய்ய வேண்டியது சாலை வதிகளை அனுசரித்து நடப்பது தான். முக்கியமாக வாகனம் ஓடுபவர்கள் சில பாதுகாப்பு முறைகளை மனதில் வைத்துக்கொண்டால் எத்தனையோ விபத்துக்களைத் தவிர்க்கலாம். இந்த விடயத்தில் மிகவும் அனுபவப்பட்ட ஒருவர் சில குறிப்புக்களைக் கொடுத்திருக்கிறார். வாகனம் ஓடுபவர்கள் இவற்றை மனதில் வைத்துக் கொள்வது நல்லது. மிகவும் சாதாரணமாகத் தெரிந்தாலும் இவை முக்கியமான குறிப்புகள்.

முதலில் வாகனம் ஓடும் ஒவ்வொருவரும் மற்ற வாகன ஓட்டிகளுக்கு போக்குவரத்து சட்டதிட்டங்கள் எதுவும் தெரியாது. அதனால் நாம் தான் கவனமாக ஓட்டிக்கொண்டு போகவேண்டும் என்று மனதில் நினைத்துக்கொள்ள வேண்டும். இரண்டாவது எப்போதும் இரண்டு கையையும் ஸ்டியரிங் வீல் மீது வைத்துக் கொள்ள வேண்டும. சிலர் வலது கையை ஸ்டைலாக கதவின் மீது வைத்துக்கொண்டு போவார்கள். திடீரென்று குறுக்காக ஏதாவது வந்துவிட்டால் வீலை திருப்புவதற்குப் போதுமான பலமில்லாமல் போய்விடும்.

மூன்றாவது எதிரில் பார்வையை மறைக்கக் கூடிய அளவு பெரிய வாகனம் ஏதாவது நின்று கொண்டிருந்தால் அதைக் கடந்து போவதற்கு முன் ஹோரன் அடித்து விட்டு கவனமாகப் போக வேண்டும். நான்காவது பகலில் இன்டிகேட்டரை போடக் கூடாது. அது இரவில் போடுவதற்காக பகல் இன்டிகேட்டர் கைதான். ஐந்தாவது சாலை சந்திப்புக்களில் திரும்பும் போது நீங்கள் என்ன தான் சிக்னல் காட்டினாலும் பின்னால் ஏதாவது வாகனம் வருகிறதா என்று பார்த்துக்கொள்ளுங்கள். ஆறாவது வேகமாகப் போய்க் கொண்டிருக்கும் போது திடீரென்று பிரேக் போட வேண்டாம்.

ஏழாவது ஆடு, மாடு ஏதாவது வீதியில் நிற்கிறதா? கிட்டே போய் திடீரென்று ஹோரன் அடிக்கக் கூடாது. அவை மிரண்டு போய் வாகனம் மீதே விழுந்து விடும். எட்டாவது இன்னுமோர் வாகனத்தைக் கடக்கும் போது உரசிக் கொண்டு போவது போல போகக் கூடாது. முடிந்தளவு தாராள இடைவெளி வேண்டும். அதற்காக மிகவும் தாராளமாக விலகிப் போக வேண்டாம் இன்னொரு ஓரத்தில் புளியமரம் நின்று கொண்டிருக்கும். ஒன்பதாவது எதிரெதிராக இரண்டு வாகனங்கள் கடக்கும் போது வேகத்தைக் குறைக்க வேண்டும்.

பத்தாவது இரவில் போய்க் கொண்டிருக்கும்போது எதிரே வருபவர் வெளிச்சத்தை குறைத்துக் கொள்ளட்டுமே என்று நினைக்கக் கூடாது. முதலில் நாம் குறைத்து விட்டு வாகனம் கடந்து போனபின் வெளிச்சமாக்கிக் கொள்ளலாம். இந்த பத்துக் குறிப்பும் சாதாரணமாகத் தெரியலாம் இருந்தாலும் பல விபத்துக்களைப் பார்த்த அனுபவத்திலிருந்து தொகுக்கப்பட்ட குறிப்புகள் இவை.

எல்லாவற்றிற்கும் மேல் வாகனத்தைச் சரியான நிலையில் வைத்திருக்க வேண்டும். வாகனத்தை ஓட்டுபவரும் சரியான நிலையில் இருக்க வேண்டும்.

ஒரு கல்யாண கோஷ்டியை அழைத்துச் செல்வதற்கு வாகனம் தயாராக இருந்தது சாரதி வந்து சேரவில்லை. கூட்டத்தில் இருந்த ஒருவர் ''எனக்கு பஸ் ஓடத்தெரியும்!'' என்றார். சரி என்று எல்லோரும் ஏறி உட்கார்ந்தனர். இவரும் மெதுவாக அவர்களைப் போக வேண்டிய இடத்தில் கொண்டு போய் விட்டுவிட்டார்.

எல்லோரும் இறங்கிய பின்பு ஒருவர் மெதுவாக அந்த பஸ்ஸை ஓடியவரிடம் வந்து 'மிக்க நன்றி !' எங்களைக் கவனமாக கொண்டு வந்து சேர்த்துவிட்டீர்கள்! அது சரி... நீங்கள் ஓடிக் கொண்டுவரும் போது வழி முழுவதும் உங்கள் காலுக்கு அடியில் குனிந்து எதையோ தேடியது போல் தெரிந்ததே என்றார். ''ஆமாம்! பிரேக் எது என்று தேடிக் கொண்டிருந்தேன் கடைசிவரை தேடிக்கண்டு பிடிக்கவே முடியவில்லை. பரவாயில்லை அதுதான் வந்து சேர்ந்துவிட்டோமே'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சுனாமி நிவாரணப்பணி குறித்து

# மஹிந்த, ரணிலின் கருத்துக்களை ஊடகங்களில் வெளியிடத் தடை!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் தொடர்பிலும் நிவாரணம் தொடர்பிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தெரிவிக்கும் கருத்துக்களை கண்காணிப்பது என்றும் அவற்றை தடை செய்வது என்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரச உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஊடக அமைச்சர் மங்கள சமரவீர அரசின் இம் முடிவை கடந்த புதனன்று தனது அமைச்சில் வைத்து தெரிவித்துள்ளார்.

இதன்படி அவரின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகம் இவர்களின் கூற்றுக்களை கடுமையாகக் கண்காணிக்கவிருக்கிறது.

இந்த யோசனையை ஜே.வி.பியே அரசாங்கத்திற்கு தெரிவித்திருக்கிறது.

மேலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினை புத்துயிரளிக்கும் ஒரு நோக்காகவும் இது கருதப்படுவதாக அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

பிரதமரினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் உரைகளை, கருத்துக்களை வெளியிட முன்னர் தனது உத்தரவு பெறவேண்டும் என்றும் அமைச்சர் சகல பத்திரிகைகளுக்கும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் கடுமையான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அமைச்சருடன் தகவல் அமைச்சு செயலாளர் டபிள்யூ. பி.கனேகல, அதன் பணிப்பாளர் பியதாச உட்பட பலர் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் இக் கூட்டத்தில் பேசிய மங்கள சமரவீர எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சுனாமி பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயம் செய்திருப்பதால் அவர் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துவிட்டார்.

இதனால் அவருக்கு மேலும் மக்கள் ஆதரவு பெருகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன், சுனாமியை அடுத்து பிரதமரை பற்றி பத்திரிகைகளில் வெளியாகிய செய்திகள் அனைத்தையும் தன்னிடம் கையளிக்குமாறும் அமைச்சர் பணித்துள்ளார். (க-6)

# சுனாமி அனர்த்த நிதியை பகிர்ந்தளிப்பது குறித்த புலிகளின் யோசனை ஜனாதிபதியால் நிராகரிப்பு?

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிற்கு சுனாமி அனர்த்த நிதியை பகிர்ந்தளிப்பது தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கும் புலிகளிற்கும் இடையே ஒரு புரிந்துணர்வு எட்டப்படவில்லை என தெரியவருகிறது.

விடுதலைப்புலிகளின் பிரேரணைகளை ஜனாதிபதியும் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் நிராகரித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்தவாரம் நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரின் இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது அரச சமாதான செயலகப் பணிப்பளா ஜயந்த தனபாலவிடம் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளா புலித்தேவன் இப் பிரேரணைகளை கையளித்திருந்தார்.

ஒரு சிங்களப் பிரதிநிதி, முஸ்லிம் பிரதிநிதி, தமிழ் பிரதிநிதி ஆகியோர் உள்ளடங்கிய குழு ஒன்று அமைக்கப்படல் வேண்டும் என புலிகள் பிரேரணையில் கோரியிருந்தனர்.

அத்துடன் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை சேர்ந்த 11பிரதிநிதிகளையும் அவர்களில 6 பேர் தமிழர்களாகவும், 3 பேர் முஸ்லிம்களாகவும், 2பேர் சிங்களவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்றும் புலிகள் கோரியிருந்தனர்.

இது ஒருபுறமிருக்க சுனாமி நிவாரண நிதியை அரசாங்கம் கையாளுவதில் தமக்கு திருப்தி இல்லை என தமிழ்ச்செல்வன் தமிழ்க் கூட்டமைப்பு எம். பிக்களிடம் தெரிவித்திருக்கிறார்.

சர்வதேச நாடுகள் இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென பெருமளவு நிவாரணப் பொருட்களையும் நிதியையும் அரசிடம் கையளித்தபோதும் தமிழ் மக்களுக்கு அந்தப் பொருட்கள எதுவும் வழங்கப்படவில்லை.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், யுனிசெவ், யு.என். எச்.சி.ஆர., ஐ.சி.ஆர்.சி.போன்ற தொண்டு நிறுவனங்களின் நிவாரணப் பொருட்களைத் தவிர அரச நிறுவனங்களின உதவிகள் எதுவும் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

இந்நிலையில் அரசு வெளிநாடுகளின் உதவிகளைத் தவறான முறையில் பயன்படுத்தி வருவது தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதிலும் முப்படைகளைப் பலப்படுத்துவதிலும் ஆர்வம் காட்டி வரும் அரசு சர்வதேச நாடுகளையும் தமிழ் மக்களையும் ஏமாற்றி வருகின்றது.

இதனால் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் நிவாரண நிதியை பகிர்ந்தளிப்பது தொடர்பான தமது நியாயமான யோசனைகளை அரசிடம் சமர்ப்பித்திருந்தார்கள்.

இலங்கையில் ஏற்பட்ட சுனாமிப் பேரலையினால் சகல இனமக்களும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். இதனால் சகல இன மக்களுக்கும் நிவாரணப்பொருட்கள் சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு ஆகும். (க-6)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தொடர்ந்தும் நிவாரணப் பணியில்

(கொழும்பு)

தமிழர் தாயக மக்களின் துயர் துடைக்க மேலும் இரண்டு இலட்சம் வெள்ளிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தாயக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு ஜனவரி மாதம் 17ஆம் திகதி அன்று அனுப்பிவைத்துள்ளது.

ஏற்கனவே 5இலட்சத்து 75 ஆயிரம் டொலர்களை அனுப்பிவைத்துள்ளது. மேலும் சுனாமி கடற்கோளால் பாதிக்கப்பட்ட மக்களுகக்கு தேவைப்படும் சமையல் பாத்திரங்கள் கொள்வனவு செய்வதற்கென 50 ஆயிரம் வெள்ளிகளை தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளது. அங்கிருந்து அந்தப் பொருட்கள் தமிழர் தாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

தற்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், இறைச்சி,பருப்பு, புதுஉடுப்புக்கள் ஆகியவற்றை சேகரித்து அவற்றை உடனடியாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த முயற்சிக்கு கைகொடுத்து உதவுமாறு எல்லோரையும் குறிப்பாக வெளிநாடுகளில் உள்ள வணிகப் பெருமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தப் பொருட்களை களஞ்சியப்படுத்த தற்காலிக பண்டகசாலை ஒன்று தேவைப்படுகிறது எனவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கேட்டுள்ளது. (க)

# இந்துக் குருமார்களுக்கு சமாதான நீதவான் நியமனம்

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வித்யா சர்வதேச இந்துமத பீட செயலாளர் பிரம்மஸ்ரீ ராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா இந்துசமய அலுவல்கள் விவகார அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவாணந்தாவைச் சந்தித்து இந்துக் குருமார்களின சமூகப்பணி பற்றியும் அந்தண சிறுவர்களின் வேதாகம கல்வி பற்றியும் கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பின் போது அந்தணர்கள் சமூகப் பணிகளில் ஈடுபடுத்தும் முகமாக முதற்கட்ட நடவடிக்கையாக சமாதான நீதவான் நியமனம் பற்றி அமைச்சரிடம் பீடச் செயலாளர் கலந்துரையாடினார். அதனை ஏற்றுக் கொண்ட அமைச்சர் அதற்கான ஒழுங்குகளை செய்வதாக உறுதி அளித்தார். மேலும் ஸ்ரீ வித்யா குருகுல மாணவர்களின் வேத ஆகம கல்வியை மேம்படுத்தும் முகமாக இவ் ஆண்டிற்கான நிதி உதவி தேவை குறித்து அமைச்சரிடம பீடச் செயலாளர் கோரிக்கை விடுத்தார். (ப)

## சுனாமியால் வீடிழந்தோருக்காக

# லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் 75 வீடுகளை அமைக்கத் திட்டம்

(தென்மராட்சி)

சுனாமி பேரழிவின் காரணமாக தமது வீடுகளை இழந்திருக்கும் 75 குடும்பங்களுக்கு சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பி மாவட்டம் தனியான வீடமைப்புத் திட்டம் ஒன்றினை அமுல் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

வட பகுதியில் இயங்கி வருகின்ற பதினாறு லயன்ஸ் கழகங்களின் வேண்டுகோளுக்கு இணங்க சர்வதேச லயன்ஸ் கழகங்களின் தலைமையகம் இத் திட்டத்திற்கென 20 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக வட பகுதி லயன்ஸ் கழகங்களின் ஒன்றியத்தின் செயலாளரும் இணைப்பாளருமான லயன் எஸ். ஞானராஜா தெரிவித்துள்ளார்.

இதேசமயம் இவ் வீடமைப்புத் திட்டம் அமுல் செய்வது தொடர்பான பணிகளை நிர்வகிக்கவென லயன் கே. தணிகாசலம் தலைமையில் செயல்பாட்டுக் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், இத்திட்டத்திற்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் 306 பி மாவட்டத்தில் ஆளுநர் லயன் எஸ். சிவானந்தன் தென கொரியாவிலுள்ள லயன்ஸ் கழகங்களின் நிதி மற்றும் பொருள் உதவிகளையும் பெற்றுக் கொடுக்கவுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (ப-16)

# நீரிழிவு நோயின் பாதிப்பால் ஆண்மைக் குறைவு ஏற்படும்!

## மருத்துவ விளக்கம்

முன்பெல்லாம் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத்தான் நீரிழிவுநோய் வரும். இப்போது 25 வயதிற்கும் கீழ் உள்ளவர்களுக்கும், ஏன்... குழந்தைகளுக்குக் கூட வருகிறது. இதற்கு என்ன காரணம் என்பதை அறிந்துகொள்வதோடு, இந்த நோயால் வரக்கூடிய பாதிப்புகளையும் அறிந்து கொள்ளவேண்டும்.

இரத்தத்தில் சர்க்கரையின் அளவு இயல்பான அளவு இருப்பதைவிட அதிகமாவதைத்தான் நீரிழிவு நோய் என்கிறோம். இயல்பான அளவு எல்லோருக்கும் தெரிந்திருக்கலாம். இருந்தாலும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வது நல்லது.

இயல்பான அளவு சாப்பிடும் முன் 60-100 மி.கி% சாப்பிட்டு இரு மணி நேரம் கழித்து 80-120 மி.கி% பல காரணங்களினால் இரத்தத்தில் சர்க்கரை அதிகமாகிறது. இரத்தத்தில் சர்க்கரையை இன்சூலின் என்ற ஓர் இயக்க நீர் உடலில் சுரக்காமல் போவதாலும், சுரக்கும் அளவு குறைவதனாலும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு இயல்பான அளவை விடக் கூடுகிறது.

நீரிழிவு நோய் வந்தவர்களுக்கு ஆண்மைக்குறைவு ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். நீரிழிவு நோய் வந்தால் அது எல்லா உடல் உறுப்புகளையும் பாதிக்கும் அபாயம் உள்ளது. அதிலும் குறிப்பாக இரத்தக்குழாய் பாதிப்பு என்பது ஆண்மைக்குறைவு வரை போகலாம். நோய் பாதிப்பு என்பது நோய் வந்தவுடனே தொடங்கி விடுவதில்லை. சர்க்கரையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்காமல் தொடர்ந்து அலட்சியமாக இருந்தால் நான்கைந்து ஆண்டுகளில் அதன் பாதிப்பு மிக மோசமாக இருக்கும். இரத்தக்குழாய்கள் சுருங்கினால் ஆணுறுப்புக்கு செல்லும் இரத்தத்தின் அளவு குறையலாம். நரம்புகளும் பாதிப்படையலாம். நரம்புகள் பாதிக்கப்பட்டால் இரத்தக்குழாய்கள் விரிவடையாமல் தடை ஏற்படும். நீரிழிவு நோய் வியாதியோடு புகைப்பழக்கமும் இருக்கும் பட்சத்தில் இரத்தக் குழாய்களை இன்னும் அதிகமாக சேதப்படுத்தலாம். இதைவிட குடிப் பழக்கமும் உள்ளவராக இருந்தால் சர்க்கரை கட்டுப்பாட்டுக்கு வராது.

★ சர்க்கரையை வாழ்நாள் முழுவதும் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டால் நோய் பாதிப்பே இல்லாத சாதாரண மனிதராக வாழலாம்.

★ கட்டுப்படுத்தத் தவறினால் அது ஆண்மைக்குறைவில் மட்டுமல்ல இன்னும் பல வியாதிகளை உண்டு பண்ணுவதுடன் உயிருக்கே கூட ஆபத்தை வரவழைக்கலாம்.

★ இதற்கு அக்குபஞ்சர் போன்ற மருத்துவ முறைகள் பயனளிக்காது.

★ எந்த மருத்துவ முறையைக் கையாண்டாலும் சர்க்கரையின் அளவு கட்டுப்பாட்டில் உள்ளதா என பரிசோதனை செய்து பார்த்துக்கொள்ளவேண்டும்.

★ கட்டுப்பாட்டில் உள்ள நீரிழிவு நோயாளரின் அளவு சாப்பிடும் முன் 80-120 மி.கி% சாப்பிட்டு இரண்டு மணி நேரம் கழித்து (சர்க்கரை நோய் மருந்துகளுடன்) 140-180 மி.கி%

★ கட்டுப்பாட்டில் இல்லாத சர்க்கரை நோயாளி இரத்தத்தின் அளவு கட்டுப்பாட்டிற்குள் வரும் வரை மருத்துவரின் அறிவுரைப்படி இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளவேண்டும்.

★ சர்க்கரை மிக அதிகமாக இருந்தால் அளவுக்கு அதிகமாக சோர்வு, மயக்கம், நாக்கு வறட்சி அதிக சிறுநீர் கழித்தல், அடிக்கடி தண்ணீர் குடித்தல், அதிக பசி, எடை குறைதல், சிறுநீர் வெளியாகும் இடத்தில் நமைச்சல் முதலியன இருக்கும்.

★ நீரிழிவு நோய் இருந்தும் நீரிழிவு நோய் இல்லாத ஒரு நபர் போல வாழவேண்டும் என்பது மருத்துவ சிகிச்சையின் நோக்கம்.

★ ஒழுங்கான உணவுக்கட்டுப்பாடு, தொடர்ந்து உடற்பயிற்சி, டாக்டரின் ஆலோசனைப்படி மருந்து... இந்த மூன்றும் சமனாக இருந்தால்தான் வெற்றி கிடைக்கும்.

★ உணவில் ஒருவித கட்டுப்பாட்டைக் கடைபிடித்தால் குடும்பத்தினர் அனைவரும் அதைப் பின்பற்றுவார்கள். வாழ்க்கை ஒரு நல்வழிப்பாதைக்குத் திரும்பும்.

★ சர்க்கரை அளவு கட்டுப்பாட்டில் இருந்தால் தாம்பத்ய வாழ்வு வாழ்நாள் முழுவதும் சீராக இருக்கும். அப்படியே பாதிப்பு வந்தாலும் அதைக்கண்டு அஞ்சத் தேவையில்லை. இன்றைய நவீன மருத்துவம் அதற்கு உரிய சிகிச்சையை அளிக்கும். பல்வேறு மருந்துகளும், சிகிச்சை முறைகளும் நல்ல பலனைத் தருவதாக உள்ளது.

★ நீரிழிவு நோய் வந்தாலே ஆண்மை பறிபோய்விடுமோ என்ற மனப்பதட்டத்திலேயே சிலர் இயலாமையை அடைகின்றனர். எதற்கும் மருத்துவம் இருக்கிறது என்பதை நம்பவேண்டும்.

மருத்துவமேதை
T.காமராஜ்

நீரிழிவுநோயை ஒரு குறைபாடாகக் கருதாமல் வாழ்க்கையின் ஒரு பகுதியாக எடுத்துச் கொள்ள வேண்டும்.

ஆண்மைக்குறைவு வராமல் தடுத்துக்கொள்ள முடியும். ஆங்கிலத்தில் **Use it or Lose it** என்பார்கள். அந்த மாதிரி இழக்கின்ற நிலை வேண்டாம். □

## செயன் முறை பரீட்சை

(பொன்னாலை)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி நாடகமும் அரங்கியலும் பகுதி II பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான செயன் முறைப் பரீட்சை இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை யாழ்.பல்கலையில் புதிதாகத் திறக்கப்பட்ட வெளிவாரிப் பட்டப்படிப்புப் பிரிவுக்கான கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (க-49)

## கிராம அலுவலர் நியமனம்

(பொன்னாலை)

பொன்னாலை ஜே/170 கிராம அலுவலர் பிரிவுக்குப் புதிய கிராம சேவையாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இப் பிரிவில் கடமையாற்றிய கிராம அலுவலர் வேறொரு பகுதிக்கு மாற்றம் பெற்றுச் சென்றதையடுத்தே, இப் பகுதிக்குத் தற்போது ஆர்.ஶ்ரீரஞ்சன் கிராம அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனவரி மாதம் சங்கானைப் பிரதேச செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராம அலுவலர்களுக்கான உள்ளக இடமாற்றத்தின் அடிப்படையிலேயே மேற்படி கிராம அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (க-49)

## வயோதிபர் படுகாயம்

(கரவெட்டி)

பருத்தித்துறை மாதனைப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சு.பிலிப்பு (வயது 70) என்பவர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த பிரஸ்தாப வயோதிபரை எதிரில மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இரு இளைஞர்கள் மோதிவிட்டு சம்பவ இடத்தைவிட்டு நழுவிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-105)

## புதுமை மாதா ஆலயத் திருவிழா

(குருநகர்)

யாழ்.புதுமைமாதா ஆலயத் திருநாள் ஆயத்த வழிபாடுகள் கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பமாகின்றன. இன்று காலை 6.15 மணிக்கு திருப்பலியின் பின்னர் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் மாலை 5.30 மணிக்கு நவநாள் வழிபாடுகள் நடைபெறும்.

எதிர்வரும் 2 ஆம் திகதி 6.15 மணிக்குத் திருப்பலியில் மெழுகுவர்த்தி ஆசீர்வதித்தலும், மாலை 4.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும், பவனியும், ஆசீர்வாதமும் இடம்பெறும்.

திருநாள் திருப்பலி மறுநாள் 3 ஆம் திகதி காலை 5.00 மணிக்கு முதற்திருப்பலியும், 7.00 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து திருப்பவனியும் இடம்பெறும்.

நவநாட் காலங்களில் மக்களை பக்தியுடன் இறைவன் பக்கம் திருப்ப அருட்திரு ஏ.யே.லம்பேட் (அ.ம.தி) மறையுரைகளை ஆற்றவுள்ளார். (க-4)

## கடந்த ஆண்டில் 35 சிசு மரணங்கள் தாய்-சேய் நல நிலையம் அறிக்கை

(சுதுமலை)

மானிப்பாய்-சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வருடத்தில் மட்டும் 35 சிசு மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தாய்-சேய் நல நிலையப் புள்ளி விபர அறிக்கையில் இருந்து தெரியவருகின்றது..

இப் பகுதியில் கடந்த வருடம் ஆயிரத்து 658 பிறப்புகள் பதியப் பட்டுள்ளது. இந்தப் பதிவுகள் மூலம் குழந்தை பிறந்து 7 நாளுக்குள் 20 சிசுக்கள் மரணம் அடைந்துள்ளதாகவும் ஒரு மாதத்திற்குப் பின்பு 13 சிசுக்கள் மரணம் அடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்த இறப்புகளில் அனேகமான சிசுக்கள் சுவாசத்தொற்று, மூச்சுக்கஷ்டம் போன்ற காரணத்தாலும் மற்றும் பிறப்புக்குறைபாடுகள் முதிர்ச்சியடையாமை மற்றும் வயிற்றோட்டம் காரணமாகவும் இவ் இறப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் 2003 ஆம் ஆண்டு இப் பகுதிகளில் 41 சிசு மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கடந்த வருடத்தில் இது சற்றுக் குறைவடைந்துள்ளதாகவும் இனிவரும் காலங்களில் கர்ப்பகாலத்தில் சரியான கவனிப்பு, விழிப்புணர்வு நிகழ்வுகளை மேற்கொள்வதன் மூலம் இத்தொகையைக் குறைத்துக் கொள்ள முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (க-252)

## தூக்கிலிடப்பட்ட நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

### புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

(பொலிகண்டி)

புன்னாலைக் கட்டுவன் நாக தம்பிரான் ஆலய வீதியிலுள்ள மரம் ஒன்றில் அடிகாயங்களுடன் தூககிலடப்பட்ட நிலையில் சடலம் கடந்த 20 ஆம் திகதியன்று காலை மீட்கப்பட்டது. புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த பானுதேவன் பாஸ்கரன் (வயது 22) என்பவரது சடலமே மீட்கப்பட்டது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, இவர் அதிகாலை 3.00 மணிக்கு தோட்டத்துக்கு நீர் இறைப்பதற்காகச் சென்றார் எனவும் காலை ஆகியும் தனது கணவனைக் காணவில்லை என நினைத்து மனைவி தேடிய போது, அவர் மரம் ஒன்றில் தூக்கிலிடப்பட்டவாறு காணப்பட்டார் எனவும் தெரிய வருகின்றது. இச் சம்பவம் இறந்தவரின் வீட்டில இருந்து 100 மீற்றர் தூரத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்துக்கு 12.30 மணியளவில் மல்லாக நீதவானும் பொலிஸாரும் வருகை தந்தனர். பின்பு சடலம் பிரதேச பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர். (க.106)

## புனர்நிர்மாண வேலைகளில் புலிகளை இணைக்கக் கூடாது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கென புனரமைப்பு வேலைகளில் விடுதலைப் புலிகளை இணைத்துக் கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜே.பி.பி. தலைவர் சோமவன்ச அமர சிங்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு வெளியே நிவாரண வேலைகளில் ஈடுபட்டுள்ள தமது குழுக்களிடையே உரையாற்றும் போது அவர் இதனைக் கூறினார், அரசாங்க வேலைத் திட்டத்தினுள் ஆயுதம் தாங்கிய அமைப்பொன்றை பயன்படுத்த முடியாது.

ஆயுத அமைப்பொன்றை முறையான அரசு ஒன்று உத்தியோக பூர்வ செயற்பாடு ஒன்றிற்கு பயன்படுத்துமானால் அவர்களை அவ் அரசு அங்கீகரிப்பதாகவே அமையும். வடக்கு-கிழக்குப் பகுதிகளிற்கான நிவாரணப் பணிகளை மேற்கொள் அரசு நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருக்கவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சுனாமி அலையினால் பாதிக்கப்பட்ட நகரங்களை கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த நகரங்களை கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்யவுள்ளதாக நகர அபிவிருத்தி, மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

சுனாமி அலையினால் 60 சிறிய நடுத்தர மற்றும் பிரதான நகரங்கள் சேதமடைந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 15 பிரதான நக்ரங்களைத் துரிதமாக நிர்மாணிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நகரங்களை அபிவிருத்தி செய்யும் போது பொதுமக்களுக்குத் தேவையான சேவைகளுக்கு முனனுரிமை வழங்கப்படவுள்ளது. இதில் இரண்டாம் கட்டமாக குறிப்பிட்ட நகரங்களின் வர்த்தக நடவடிக்கைகள் மீளக் கட்டியெழுப்பப்படவுள்ளன.

நகர அபிவிருத்தியின் போது வர்த்தக நடவடிக்கைகளை முதலில் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்த நகர அபிவிருத்தி அமைச்சர், கட்டம் கட்டமாக நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

சேதமடைந்த அனைத்து நகரங்களையும் வழமை நிலைக்குக் கொண்டுவருவது சிக்கலான நடவடிக்கை என்பதால் அவை நிறைவடையும் காலத்தை உறுதியாகக் கூறமுடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## பொலிஸாரின் அத்து மீறலால் இளம் பெண் தற்கொலை

பொலிஸாரின அத்து மீறலால் இளம் பெண் ஒருத்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவத்தில் சப் இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிஸார் வேலை இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பார்க்கரா கிராமத்தில் குப்பிஎான் என்பவர் கள்ளச் சாராயம் விற்பதாகக் கூறி அவர் வீட்டுக்குத் தனியர் கோவல் பொலிஸ் நிலையப் பொலிஸார் விசாரணைக்குச் சென்றனர். வீட்டில் தனியாக இருந்த அவரது மகள் ஜெயராணியை பொலிஸார் மானபங்கப்படுத்தியதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட அந்த இளம் பெண் ஜெயராணி கடந்த 20 ஆம் திகதி தற்கொலை செய்து கொண்டார்.

சம்பவம் பற்றிக் கோட்டாட்சியரும் டி.எஸ்.பி.யும் நேற்று முன்தினம் விசாரணை நடத்தியதையடுத்துத் தனியர் கோவில் சப் இன்ஸ்பெக்டர் இராயேந்திரன் உள்ளிட்ட 3 பொலிஸார் தற்காலிப் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

இதையடுத்துத் தலைமறையாகிவிட்ட சப் இன்ஸ்பெக்டர், பொலிஸார் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (து)

# தற்கொலைப்படை தாக்குதலை சமாளிக்க பல்வேறு வியூகங்கள்

வரும் 30ஆம் திகதி ஈராக்கில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின்போது தற்கொலைப்படைத் தாக்குதலைச் சமாளிக்க பல்வேறு வியூகங்களை ஈராக் மற்றும் அமெரிக்கப் படையினர் வகுத்துள்ளனர்.

இத்தேர்தலைச் சீர்குலைக்கத் தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். ஏற்கனவே, கார் வெடிகுண்டுகள் மூலம் ஈராக்கின் பல பகுதிகளில் தாக்குதல் நடத்தப்படுகிறது.

இந்நிலையில்; தேர்தலின்போது ஓட்டுசசாவடிகளைத் தீவிரவாதிகளிடம இருந்து காப்பாற்றப் புதுப் புது யோசனைகளில் ஈராக் மற்றும் அமெரிக்கப் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனா.

அமெரிக்கப் பாதுகாப்பு முதல் படைப்பிரிவின் மேஜர் ஜெனரல் ஜான் பேடிஸ்ட் தலைநகாட பக்தாத்தின் வடக்குப் பகுதியில் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுள்ளார். இந்தப் பகுதி சன்னி முஸ்லிம்கள் ஆதிக்கம் நிறைந்தது.

ஓட்டுப் பதிவின் போது ஓட்டுச்சாவடிகளைப் பாதுகாக்க புதிய திட்டங்களை வகுத்துள்ளோம். பாதுகாப்பை ஈராக் படையினரிடம் ஒப்படைத்து, அவர்களுக்கு உறுதுணையாக அமெரிக்க வீரர்கள் இருப்பார்கள். பொரும்பாலான ஓட்டுச்சாவடிகளின் இடங்கள் இன்னும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.



எந்த இடத்தில் ஓட்டுப்பதிவு நடக்கிறது என்ற விபரம் கடைசி நரத்தில் வெளியிடப்படும். அதன்மூலம், தீவிரவாதிகள் முன்கூட்டியே தாக்குதல் திட்டம் தீட்டுவதைத் தடுக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

தேர்தலின்போது கார் போக்குவரத்துக்குத் தடை போன்ற கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் திட்டவட்டமாகக் கூறியபோதிலும் தேர்தல் அமைதியாக நட பெறுமா என்பது இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஈராக் படையினருககு அமெரிக்கப்படையினர் தீவிர பயிற்சி அளித்துள்ளனர். அதுடன் ஏ.கே.47 ரக துப்பாக்கிகள், ஆயுத வாகனங்கள், தகவல் தொடர்பு கருவிகள போன்றவற்றை ஈராக் படையினருக்கு வழங்கியுள்ளனர்.

எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கும வகையில் பயிற்சி பெற்ற ஈராக் வீரர்கள தற்போது முழு நம்பிக்கையுடன இருக்கின்றனர் என்று ஜான் கூறியுள்ளார். (து)

# தீ விபத்து

ஈராக்கின் தென்பகுதியான நசீரியாவில் உள்ள அரசு மருததுவமனையில் திடீரென ஏற்பட்ட தீவிபத்தில் 12 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலையில் இவ் வபத்து நடந்தது. மின்கசிவு காரணமாக இவ்விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தீயணைப்புத் துறையினர் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மற்றொரு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (து)

## WORLD NEWS உலக தரிசனம்

# பாகிஸ்தானில் 29 இந்தியர்கள் கைது


பாகிஸ்தானுக்குள் சட்டவிரோதமாக நுழைநததாக 29 இந்தியர்களை அந்நாட்டு எல்லைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர். இந்திய மற்றும் பாகிஸதானைச் சேர்ந்தவர்கள் வேலைக்காக ஈரான் மற்றும் துருக்கி வழியாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வது வழக்கம்.

இதேபோல், கடந்த பத்து நாட்களுக்கு முன் துருக்கி வழியாக ஐரோப்பாவிற்குச் செலலமுயன்ற 29 இந்தியர்கள் விசா உட்பட உரிய ஆவணங்கள் இல்லை எனக்கூறி அந்நாட்டு அதி காரிகளால் திருப்பியனுப்பப்பட்டனர்.

இதையடுத்து, இவர்கள் அருகில் உள்ள பாகிஸ்தானில் நுழைந்தனர். தங்கள் நாட்டிற்குள் சட்டவிரோதமாக நுழைந்துள்ளதாகக் கூறி அந்நாடடு எல்லைப் பாதுகாப்புப படையினர் நேற்று முன்தினம் அவர்களைக் கைது செய்தனர்.

இதுகுறித்துப் பொலிஸார் கூறுகையில்,சட்டவிரோதமாக நுழைந்த 29 இந்தியர்களும் பாகிஸ்தானில் உள்ள குவட்டா நகருக்குச் செல்ல முயன்றபோது பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட சோதனையில் இவர்கள் சட்டவிரோதமாக நுழைந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

சில மாதங்கள் சிறைத்தண்டனையோ அல்லது அபராதத் தொகையோ இவர்களுக்கு விதிக்கப்படலாம் என்றனர். (து)



டில்லியில் நாளை நடக்கவிருக்கும் குடியரசு தினத்துக்காக, மத்திய ரிசர்வ் பொலிஸ்படையைச் சேர்ந்த பெண் வீரர்கள் சீருடை அணிநது மிடுககாக அணிநடை பழகுவதையும், குடியரசுதின ஒத்திகை நிகழ்சசியில் அக்னி ஏவுகணைகளும் இட[illegible]வதையும் படத்தில் காண்க.

## இந்தோனேசியாவில் —

# மீண்டும் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் வீடுகள், கடைகள் தரைமட்டம்

(ஜகார்த்தா)

கடநத மாதம் 26ஆம் திகதி இந்தோனேசியாவின் சும்ரா தீவுப்பகுதியில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட பூகம்பத்தால் சுனாமி பேரலைகள் இந்தோனேஷியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, மாலைதீவு உட்பட 11 ஆசிய நாடுகளில் பெருத்த சேதத்தை ஏற்படுத்தியதுடன் 2இலட்சத்துக்கும் அதிகமானவர்களின் உயிர்களைப் பலிவாங்கியது.

பேரழிவில் இருந்து இந்தோனேஷிய மக்கள் இன்னும் மீளாத நிலையில் அங்கு மீண்டும் பூகம்பம் ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 3.10 மணிககு இந்தோனேசியாவின் சுலாவெசி மாகாணத தின் பாலு நகரத்தில் இருநது தெற்கே 16 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இடத்தில் இந்தப் பூகம்பம் தாக்கியது.

பூகம்பம் ஏற்பட்டபோது மக்கள் வீடுகளில் அயர்ந்து தூங்கிக்கொண்டு இருந்தனர். பூகம்பம் ஏற்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள் அலறி அடித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

இந்தப் பூகம்பத்தில் ஏராளமான வீடுகள், கடைகள் இடிந்து தரைமட்டமானது. ஏராளமானவர்கள் காயமடைந்தனர். இந்த நிலநடுக்கம் 6.2ரிக்டர் அளவாகப் பதிவாகி இருந்தது.

இதேபோல துருக்கியின் மேற்குப் பகுதியில் உள்ள கடலோரப் பகுதியிலும் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. அங்குள்ள காஸ்நகரம், அந்தல்யா ஆகிய பகுதிகளில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

இந்தப் பூகம்பம் ரிக்டர் அளவில் 5.5 புள்ளிகளாகப் பதிவானது. நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்தப் பூகம்பத்தால் பெரிய அளவில் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

கடந்த 1999ஆம் ஆண்டு துருக்கியில் ஏற்பட்ட பூகம்பத்தில் 17ஆயிரம் பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (து)



அமெரிக்காவில் உள்ள மெயின் போர்ட்லேண்ட் பகுதியில் பனிப்புயல் வீசி வருகிறது. இதனால் வெப்பநிலை 11டிகிரிக்கும் கீழே சென்றுவிட்டது. இதனால ஆர்டிக்கடலில் மீன்பிடிக்குச் சென்ற படகுகள், மீனைப்பிடித்துவிட்டு கரை திரும்பமுடியாமல் திணறி நிற்கின்றன. எனன செய்வதென்றே தெரியாமல் படகு இன்ஜினியர் திணறி நிற்கிறார்.

# அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை

ஈரான்மீது இராணுவத் தாக்குதல் நடத்தும் தவறைச் செய்யவேண்டாம் என அமெரிக்காவை ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரான் நாட்டு அதிகாரியான ஹமீத் ரேசா ஆ.்.சிபி செய்தியாளர்களிடம் சென்ற ஞாயிற்றுக்கிழமை இதனைத் தெரிவித்தார்.

ஈரான் மீது அமெரிக்கா இராணுவத தாக்குதல் நடத்த திடடமிடடுள்ளதாகவும், எங்கெங்கு ஏவுகணைத் தாக்குதல் நடததலாம் என அமெரிக்க இராணுவ அதிகாரிகள் ரகசிய புலனாய்வு நடத்தியதாகவும் பத்திரிகைகளில் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஈரான் மீது தாக்குதல் நடத்தும் தவறான முடிவை அமெரிக்க நிர்வாகம் எடுக்காது என கருதுகிறோம். அதேசமயத்தில் காரணமில்லாமல் ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துமானால் அதை நாங்கள் பாாத்துக்கொண்டிருக்க மாட்டோம். அதனால் ஏற்படும் கடும் விளைவுகளை அமெரிககா சந்திக்க நேரிடும் என அமெரிக்காவை எச்சரிக்க விரும்புகிறோம் என அவர் மேலும் கூறினார். (து)

## நாட்டைவிட்டு வெளியேற உத்தரவு;

# வங்கிக் கணக்குகளை மூடும் வங்கதேசத்தினர்

ஊடுருவல்காரர்கள் எனப் பட்டியலிடப்பட்டு, நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்ட வங்கதேசத்தினர் தங்களது வங்கிக் கணக்குகளை முடித்துக்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

ஒரிசாவில் கேந்திரபாரா மாவட்டத்தில 10 கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 551 பேர் ஊடுருவல்காரர்களாக அறிவிக்கபபடடுள்ளனர். இவர்களுக்கு வங்கி, தபால்நிலையங்களில் சேமிப்புக கணக்குகள் இருந்தன.

இந்நிலையில், நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்திரவிடப்பட்டதால் கடந்த புதன்கிழமை முதல் இவர்கள் தத்தமது வைப்புப கணக்குகளை முடித்துககொள்ளத தொடங்கியுள்ளனர். சில தபால்நிலையங்களில் போதியளவு பணம் கையிப்பில இல்லாததால் சிக்கல் ஏற்பட்டுளளது. வங்கிக் கணக்குகளை முடித்துக்கொணடாலும், தங்களது சொததுககளை அவாகள விறபது குறிதது தகவல் ஏதும் இல்லை. (ற)

# விசமப் பிரசாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த பிரபா-நோர்வேக்குழு சந்திப்பு

கடந்த மாதம் இலங்கையின் கரையோரங்களைப் பேரழிவுக் குள்ளாக்கிய கடற்கோள் அனர்த்தத்தில் இறந்துபோனவர்களில் அல்லது காணாமல் போனவர்களில ஒருவராக தென்னிலங் கையின் அரசயல் சக்திகளினாலும் பல ஊடகங்களினாலும் மனதால் விரும்பிய வண்ணம சந்தேகிக் கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடந்த சனிக்கிழமை வன்னியில் நோர்வேவெளியுறவு அமைச்சர் ஜோன் பீற்றர்சன தலைமையிலான தூதுக்குழு வினரைச் சந்தித்துபபேசியிருக் கிறார்.

கடந்த வார ஆரம்பத்தில் தனது இயக்கத்தின் அனர்த்த முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில பிரபாகரன் உரையாற்றுகையில் எடுக்கப்பட்டதாக சில இணையத்தளங்களில் வெளியிடப்பட்ட புகைப்படத்தில் காணப்படுவது அவர்தான் என்று நம்புவதற்கு தென்னிலங்கை அரசியல் சக்திகளில் பலவும் ஊடகங்களும் தயாராயிருக்கவில்லை.

அந்தப புகைப்படத்தின் நம் பகத்தன்மையில் சந்தேகம் இருப்பதால் அதைப பிரசுரிக்கவில்லை என்று கொழும்பு ஆங்கிலத் தினசரியொன்று அதன் ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தது.

லண்டனில் இருந்து கிளிநொச்சிக்குச் சென்ற விடுதலைப் புலிகளின அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை பிரபாகரன் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படமும் வெளியாகியிருந்தது. அந்தப்படத்தில் காணப படுவதுகூட பிரப்பாகரன் இல்லையென்று சந்தேகம் கிளப்பக் கூடிய பிரகிருதிகள் பீற்றர்சனுடனான அவரின் சந்திப்புக் குறித்து என்ன சொல்லப் போகிறார்களோ தெரியவில்லை.

சுமார் 100கோடி சனத்தொகையையும் எண்ணற்ற பிரச்சினைகளையும் கொண்ட இந்தியாவின் பிரபல ஆங்கிலத் தினசரிகளில் ஒன்றான 'இந்து' தமிழகத்தின் கரையோரங்களில் கடற்கோள் ஏற்படுத்திய பேரழிவுக்கு மத்தியிலும் விடுதலைப் புலிகளின் தலைவரின் கதி குறித்து பிரத்தியேக கவனம செலுதத அவகாசத்தைக் கொண்டிருக்கும் அளவுக்குத் தன்னைத் தரந் தாழ்த்திக் கொண்டதையும் நாம் கண்டோம். 2005 ஜனவரி 11இல் 'பிரபாகரன் எங்கே?' என்ற மகுடத்தில் ஆசிரியத் தலையங்கத்தை அது தீட்டியிருந்தது.

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் எதிர்பார்த்திராத இயற்கை அனர்த்தத்தினால் திணறிப் போயிருக்கும் மக்களுக்கு வழிகாட்டுவதற்கு தேசிய மற்றும் பிராந்தியத் தலைவர்கள் முன்னின்று செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தோனேஷியாவுக்கு அடுத்ததாக மோசமாகப் பாதிக்கப்பட்ட இலங்கையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும நெருக்கடி நிலையைச் சமாளிப்பதில் தங்களுக்கு இருக்கும் ஆற்றலகளை வெளிக்காட்டிச் செயற்பட்டனர்.

பிரிட்டனுக்கான தனது விஜயத்தை இடைநிறுத்திக் கொண்டு அவசரமாக நாடு திரும்பிய சந்திரிகா குமாரதுங்க நிவாரணப் பணிகளை தானே நேரடியாக வழிநடத்தினார். ஜனாதிபதி நாட்டில் இல்லாத தருணத்தில் பிரதமர் மகிந்தராஜபக்ஷ தனது ஆற்றலை உரிய முறையில் வெளிக்காட்டி நெருக்கடி நிலையைக் கையாண்டார். சகல விதமான அரசியல், இன மற்றும் மத வேறுபாடுகளுக்கு அப்பால இலங்கை மக்கள் சகலரும் நாடடை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றுபட வேண்டுமென்று சந்திரிகா குமாரதுங்கவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருமித்து வேண்டுகோள விடுத்தனர். ஆனால், தென் பகுதியைப் போலவே படு மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கொண்ட வடக்கு, கிழக்கில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் புள்ளி ஸ்தலத்தில் இல்லாதது கவனத்தை ஈர்க்கிறது. தன்னாலும் தனது இயக கத்தினாலும் மாத்திரமே தலைமைதாங்கப்படக் கூடியவர்கள் என்று பிரபாகரன் உரிமைகோரும் மக்கள் பேரிடருக்குள்ளாகியிருக்கும வேளையில் அவர் எங்கே? என்று 'இந்து' கேள்வியெழுப்பியது.

வடக்கு, கிழக்கில் அவலத்துக்குள்ளாகியிருக்கும் மக்கள் மீதான கருணையா அல்லது தனது மனவிருப்புக்கு ஏற்ற சம்பவமொன்றுக்கு இயற்கை அனர்த்தம் வாய்ப்பை ஏற்படுத்திவிட்டதோ என்ற வக்கிர உணர்வுடனான விபரீத அங்கலாய்ப்பா 125 வருட பத்திரிகைத் துறைப பாரம்பரியத்தைக் கொண்டதாக பெருமையையும் உரிமையையும கோரிக்கொள்ளும் 'இந்து'வின் இக் கேள்விக்குக் காரணம்?

உண்மையில், நினைவுக் கெட்டிய காலத்தில் முன்னென றுமில்லாத இயற்கை அனர்த்தத்தை சந்தித்த இலங்கை மக்கள் திணறிப் போயிருந்தார்கள். அரசியல் நிகழ்வுப் போக்குகள் எடுக்கக் கூடிய திசை மார்க்கங்கள்,அரசியல்வாதிகளின் வியூகங்கள் குறித்து சிந்திக்கக் கூடிய நிலையிலா அவர்கள் இருந தார்கள்? ஆனால், குறிப்பிட்ட சில அரசியல் சக்திகள் இலட்சக் கணக்கான மக்களின் அவலத்திற்குள்ளும் அரசியல் சதுரங்கத்தை ஆடுவதிலேயே சிரத்தை கொணடிருந்தன என்பது வெளிப் படையானது.

கடற்கோளினால் பிரபாகரனுக்கும் விடுதலைபுலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானுக்கும் விபரீதம் நேர்ந்து விட்டது என்றும் அவ் வியக்கத்தின் இராணுவ வசதிகளுக்கும் போராளிகளுக்கும் பெரும் அழிவு ஏற்பட்டுவிட்டது என்றும் இலங்கை முன்னென்றும் இல்லாத பாரதூரமான மனிதாபிமான நெருக்கடியைச் சந்தித்த இடரார்ந்த தருணத்தில் தென்னிலங்கை அரசியல் சக்திகளும் ஊடகங்களும் பிரசாரம செய்ததைப் பார்க்கும் போது உண்மையில் மக்களுக்கு நேர்ந்த அவலத்தினால் இவர்கள் வேதனையடைந்திருந்தார்களா என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. எத்தகைய அரசியல் பிரசாரங்களை எந்த நேரத்தில் செய்ய வேண்டும் என்ற ஒரு குறைந்த பட்ச நப நாகரிகத்தை உலக ஒப்பாசாரத் தற்குக் காட்டுவதற்கேனும் பக்குவம் வளர முடியாத அளவுக்கு இன, அரசியல் ரீதியான வக்கிரம் இவர்களை ஆக்கிரமித்திருக்கும துரதிர்ஷ்டத்தைக் காண்கிறோம்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் பயனளிக்காமல் சமாதான முயற்சிகள் துரதிர்ஷ்ட வசமான தேக்க நிலையில் இருந்த போதே கடற்கோள் அனர்த்தம் நேர்ந்தது. இதனால், தோன்றிய மனிதாபிமான நெருக்கடியைக் கையாளுவதில் இருதரப்பினரும் ஒருங்கிணைந்து செயற்படக கூடியதாக இருக்குமானால், நாளடைவில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கக் கூடிய அனுகூலமான சூழ்நிலை தோன்றும் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பை வெளியிட்டுக் கொண்டிருந்த ஒரு தருணத்தில், சமாதான முயற்சிகளின் பங்காளியான ஒரு இயக்கத்தின் தலைவர் குறித்து அரசியல் சக்திகளினாலும் ஊட கங்களினாலும்(அரச ஊடகங்களும் விதிவிலக்கல்ல) செய்யப்பட்ட பிரசாரங்கள் அடிப்படை மனிதப் பண்புகளுக்கு எவ்வகையிலும் பொருத்தமானதாயிருக்கவில்லை.

பிரபாகரனுக்கு விபரீதம் நேர வேண்டுமென்ற விருப்பத்தின் அடிப்படை என்ன? இரு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக நீடித்த உள்நாட்டுப்போரில் தோற்கடிக்க முடியாமல் போன ஒரு அரசியல் -இராணுவ இயக்கத்தின் தலைவனுக்கு இயற்கையாவது விபரீதத்தை ஏற்படுத்தாதா என்று தென் இலங்கை அரசியல் சக்திகள் எதிர்பார்த்த வண்ணம இருப்பதாக அல்லவா இதைக் கருத வேண்டியிருக்கிறது. இலங்கைத் தமிழ் அரசியல் சமுதாயத்தின் மையச் சக்தியாக விடுதலை புலிகளின் போராட்டத்தின் அரசியல் நியாயமே விளங்குகிறது என்பதை ஏற்றுக் கொண்ட நிலையில்தான் சர்வதேச சமூகம சமாதான முயற்சிகளுக்கு ஆதரவையும் ஒத்துழைப்பையும் தருகிறது. தமிழ் மக்களின் அரசியல அபிலாஷைகளின் பின்னாலுள்ள நியாயங்களை அவர்களை ஒடுக்குகிறவர்களும் புரிந்து கொள்ளச் செய்த போராட்டத்திற்கு பிரபாகரன் வழங்கிய உறுதியான தலைமைத்துவமே தமிழர் அரசியலில் அவரின் சரித்திர முக்கியத்துவ பாத்திரத்தை முனைப் புறுத்திக் காட்டுகிறது.

பிரபாகரனை தங்கள் அரசியல் எதிரியாகப் பார்ப்பவர்கள் கூட அவரது தலைமையிலான இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமென் பதை மறுக்கவில்லை. அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக சிங்களத் தலைவர்களின எதிரபார்ப்புகளுக்கும் வாக்குறுதிகளுக்கும் இசைந்து அவர்களை நம்பித் தங்கள் நிலையை இழந்த தமிழ்த் தலைவர்களின் பட்டியலில் சேர்க்க முடியாதவராக - தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளைப் பொறுத் தவரை எந்தவித விட்டுக் கொடுப்புக்கும் இணங்காதவராக-பிரபாகரன் உறுதிப்பாட்டுடன் விளங்குவதைத் தவிர, வேறு எதுவும தென்னிலங்கை அரசியல் சக்திகளினதும் சமாதான விரோத ஊடகங்களினதும் வக்கிரப் பிரசாரதற்கு காரணமாயிருக்க முடியாது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தருவதாகக் கூறும் சர்வதேச சமூகத்துக்கு ஒரு முக்கிய கடமை இருக்கிறது. சமாதான முயற்சிகளின் பங்காளிகளான தமிழழ விடுதலைப் புலிகளுக்கும் அவர்களின் தலைவர்களுக்கும் எதிரான வக்கிரப் பிரசாரங்களை, குறைந்த பட்சம் அரசாங்கமாவது செய்யாமல் சொற்பபொறுப்புணர்சசியுடன் செய்யப்படுவதற்கு நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டும். சமாதான முயற்சிகளின் அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வே அரசாங்கம் இது விடயத்தில் உடனடிக் கவனம் செலுத்தவேண்டும்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகசுந்தரம் சோதிமணி
### (காரைநகர்)

காரைநகர் நடுத்தெருவை பிறப்பிடமாகவும், பண்டித்தாழ்வை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி கனகசுந்தரம் சோதிமணி அவர்கள் 23.01.2005 ஞாயிற்றுக்கிழமை இறைபதமெய்தினார். அன்னார் கனகசுந்தரத்தின் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு.திருமதி அம்பலவாணர் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு.திருமதி நாகலிங்கம்(ஆசிரியர்) தம்பதிகளின் மூத்த மகளும், அற்புதமலர்(கனடா), சிவமலர்(பிரான்ஸ்), அற்புதராசா(ஜேர்மனி), ஆனந்தராசா (ஆனந்தன் தொலைத்தொடர்பு நிலையம் காரைநகர்), சிவராசா(பிரான்ஸ்), அன்னமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலச்சந்திரன் (பேபிமாஸ்டர் கனடா - முன்னாள் ஆங்கில ஆசிரியர்), சிறிஸ்கந்தராசா(பிரான்ஸ்), தினமணி(ஜேர்மனி), கமலாதேவி, லோகேஸ்வரி(பிரான்ஸ்), இராசதுரை(கிராம உத்தியோகத்தர் **J/44** காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

பொன்னையா (இளைப்பாறிய கணக்குப் பரிசோதகர் கொழும்பு), சிவபாலன் (முன்னாள் முகாமையாளர் ஈரோஸ் பாமன்கடை கொழும்பு), புஸ்பலீலாவதி, சிவமணி ஜெகசோதி (உப அதிபர் யாழ்ரன் கல்லூரி காரைநகர்) ஆகியோரின் சகோதரியும் மீரா, ஹரி, கஜன், ரோஜனி, செந்தூரன், மயூரன், ஆர்த்திகன் அஜிந்தன், அருந்தா, அமிர்தா, மதுசன், மதுரா, பவானந்தன், லக்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2005.01.25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (இன்று) பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: அ.கனகசுந்தரம் (இளைப்பாறிய தபாலதிபர்)** **பண்டித்தாழ்வு காரைநகர்**

**T.P. 0602 213231, 0602213474**

(சி-1036)

# முத்தரப்பு ஒருநாள் தொடரில் அவுஸ்திரேலியா மீண்டும் வெற்றி

## சதம் அடித்தார் மைக்கல் கிளார்க்

அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவு அணிகள் பங்குகொள்ளும் வி.பி. முக்கோணத் தொடரில் அவுஸ்திரேலியா பாகிஸ்தானை 9



விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டது. நேற்று முன்தினம் சிட்னியில் பகல்-இரவு ஆட்டமாக நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி இரண்டு ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களை பறிகொடுத்து தத்தளித்தவேளை பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்சமாமும், சாஹிப் அப்ரிடியும் கைகொடுத்தனர்.

இன்சமாம் 61 பந்துகளில் நான்கு பவுண்டரி, ஒரு சிக்சருடன் 50ஓட்டங்களையும், அப்ரிடி 37பநதுகளில் மூன்று பவுண்டரி, 3 சிக்சருடன் 48 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தபோது பின்வந்த துடுப்பாட்ட வீரர்கள் கைகொடுக்காததனால் பாகிஸ்தான் அணி 39.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 163ஓட்டங்களை மடடுமே பெற்றது. அவுஸ்திரேலியா அணிசார்பாக லீமன் 3விக்கெட்டுக்களையும், மெக்ராத், பிரெட்லீ ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மத்யூ ஹைடன் 27 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தான் அணியின் பந்து வீசசாளர்கள் அவுஸ்திரேலியாவின் முதலாவது விக்கெட்டை துரிதமாக சாய்த்தபோதும் அதற்கு பிறகு விக்கெட் வீழ்த்தும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கவிலலை.

அவுஸ்திரேலயாவின் துவக்க வீரராக களமிங்கிய மைக்கல் கிளார்க் அபாரமாக துடுப்பெடுத்தாடி 107 பந்துகளில் 14 பவுண்டரி, ஒரு சிக்சருடன் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களை குவித்தார். கிளார்க்கின் அபார துடுப்பாட்டத்தினால் அவுஸ்திரேலியா அணி 36.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 167 ஓட்டங்களைப்பெற்று பாகிஸ்தான் அணியை 9 விக்கெற்றுக்களால் வெற்றிகொண்டது.

இதுவரை விளையாடிய 3 போட்டிகளையும் வெற்றிகொண்டு அவுஸ்திரேலியஅணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. பாகிஸ்தான் அணி 3 போட்டிகளில் ஒரு வெற்றியுடன், இரண்டாம் இடத்



திலும், மேற்கிந்தியத்தீவுஅணி இரண்டு போட்டிகளிலும தோல்வியடைந்து கடைசி இடத்தில் உள்ளது. நாளை புதன்கிழமை அவுஸ்திரேலிய அணியும், மேற்கிந்தியதீவு அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ப-19)

# மகாத்மா வாழ்வில் ஒருநாள்

சேவா கிராமம் அண்ணல் காந்தியின் தலைமையில் ஒரே குடும்பமாக இணைந்து வாழ்ந்தது.

காலம் என்பது அங்கு கண்டிப்பாக கவனத்தில் கொள்ளப்பட்டது. காலந் தவறுதல் அங்கு பெருங் குற்றமாகக் கருதப்பட்டது. சேவா கிராமத்தில் மதிய உணவு சரியாக நண்பகல் 12 மணிக்குப் பரிமாறப்படும்.

அனைவரும் 12.05க்குள் சரியாக வந்து பந்தியில் அமர்ந்துவிடவேண்டும். இல்லாவிடில், தாமதத்திற்கான காரணங்காட்டி அடுத்த பந்தியில் உண்ணவேண்டும்.

ஒருநாள் மகாத்மா காந்தியே ஒரு நிமிடம் தாமதித்து வந்துவிட்டார்.

காலம் தவறக்கூடாது என்ற கருத்துடன் அவர் அவசர அவசரமாக வந்தும் முதல்பந்தி தொடங்கிவிட்டதென்பதற்கு அறிகுறியாக மந்திர ஒலி கேட்டது. அதனால் வாசலிலே நின்றுவிட்டார். 'பரவாயில்லை உள்ளே வாருங்கள். உங்கள் இடம் காலியாக இருக்கிறது' என்று பலர் அழைத்தும், 'இல்லை, தாமதத்திற்கான தண்டனை எனக்கு வேண்டும். அடுத்த பந்தி ஆரம்பிக்கும் வரை இங்கே நிற்கிறேன்' என்றார். அடுத்த பந்தி தொடங்கும்வரை உட்கார நாற்காலி போட்டும் உட்காரவில்லை. தவறுக்குரிய தண்டனை அனுபவிப்பவருக்கு அத்துணை மரியாதை அவசியமில்லை என்று மறுத்துவிட்டாராம் காந்தி.

# மூளைச்சுமை



மூளைச்சுமை – இந்த வார்த்தையே உங்களுக்குப் புதிதாக இருக்கலாம். ஆங்கிலத்தில் இதை **'Over Load'** என்பார்கள். சுமக்க முடிகின்ற, தூக்க முடிகின்ற, இருத்தி வைகக முடிகினற அளவற்தும அதிகமாக சுமப்பதை, தூக்குவதை, இருத்தி வைப்பதைத்தான் நடைமுறையில் நாம் 'ஓவர் லோட்' என்கிறோம். தமிழில் இதற்கு அதிகசுமை என்று பெயர்.

**மூளைச்சுமை என்றால் என்ன?**

அண்மைக் காலங்களில் கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், விஞ்ஞானிகளின் வாய்கள் உதிர்த்த மணி வார்த்தைதான் இந்த மூளைச்சுமை.

ஒவ்வொரு மனிதனும் மூளை பெற்றிருக்கிறான். மனிதமூளை அளவில் பாத்தால் அதாவது வடிவத்தில் பார்த்தோமென்றால் ஒரே அளவாகத்தான் இருக்கும். ஆனால் மூளையின் திறன், தன்மை இவற்றில் ஒரு மனிதனிலிருந்து இனனொரு மனிதன் முரண்பட்டே இருப்பான். அதனால்தான் பல்வேறு மனிதர்களும் பல்வேறு விதமான குணநலன்களுடன் திகழ்கின்றனர்.

இப்படி பல்வேறு திறனும், தன்மையும் கொண்ட மனிதர்களின் மூளைத்திறனை ஆள் ஆளுக்கு மாறுபடுவதுடன் வெவ்வேறு தன்மைகளின் பிரதிபலிப்புடன் இருக்கும்.

உதாரணமாக இரண்டு இளைஞர்கள் மிகவும் அதிக கொள்ளளவுடன் திகழ்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இந்த இரு இளைஞர்களின் திறன், ஒரேமாதிரியிருப்பினும் தன்மையில் மாறுபட்டிருக்கலாம். அதாவது ஒரு இளைஞன் ஆங்கிலத்தில் முழுத்திறன் பெற்றிருக்கலாம். இனனொரு இளைஞன் விஞ்ஞானத்தில் முழுத்திறன் பெற்றிருக்கலாம்.

இப்படி திறனில், தன்மையில் வேறுபட்ட வளர்ச்சியுடன் முழுமையான திறன் பெற்றிருப்பவர்கள் கோடிக்கணக்கான மக்களில் இலட்சக்கணக்கான பேர்களே. இப்படி மூளைத்திறனில் முழு முதிர்ச்சி பெற்றிருப்பவர்களைத்தான் நாம் அறிவாளி, புத்திசாலி, கெட்டிக்காரி, சமர்த்தானவன், மேதை, மேதாவி என்றெல்லாம் அடையாளப் பெயர்களைச் சூட்டி அழைக்கிறோம்.

இவ்வாறு அறிவுத்திறனில், வெவ்வேறு தன்மைகளையும், வளர்ச்சி நிலைகளையும் பெற்றிருக்கின்ற மனிதன் – அவனது சக்திக்கு மீறிய வகையில அறிவு பெறவோ, இலக்கை அடையவோ அடைய முயற்சிக்கும் பொழுதில் குழுப்பமோ, தடைகளையோ சந்திக்க நேர்ந்துவிடுகின்றது.

ஒரு பாத்திரத்தின் கொள்ளளவையும் மறி அதனில் பொருளை நிரப்ப முடியாது என்கிற உதாரணம் மூளைக்கு பொருந்தாது என்றோ ஏவ்வளவு அறிவைப் பெற்றுக் கொண்டே இருக்கின்றோமோ அப்போது தான அவனது அறிவின் திறன், மூளைத்திறன் விசாலமாகிக்கொண்டே இருக்கும் என்றோ, பலர் கூறலாம். இதில் உண்மையும் இருக்கின்றது.

இருப்பினும் கூட.....

இந்த இடத்தில் சரியான உதாரணத்துடன் விளக்க வேண்டுமெனில் வயிற்றைத் தான உதாரணம் காட்டமுடியும். வயிறு ஏற்றுக் கொள்வதை உடம்பு ஏற்றுக் கொண்டால் தான் ஒருவன் உண்ண இயலும். இதற்கு மாறாக அமமனிதன் கண்டதையும் கண்ட வேளையில் வாய்க்குள் செலுத்தினால் வயிறு ஏறறுக்கொள்ளாது. ஒருவேளை வாந்தியாக வெளியேறலாம். அல்லது குடல் உறுப்புகள் ஜீரணிக்கச் சிரமப்படலாம். அது போன்று மூளையின் திறன், தன்மை இவற்றுக்கு உகந்த முறையில் மேலும் மேலும் திறனை அதிகரிக்கும் வகையில் செய்தி சேகரிப்பதையோ, படிப்பதையோ அறிவு பெறுவதையோ, கல்வி கற்பதையோ மேற்கொண்டால் எந்தத் தீங்கும் இல்லை.

இதற்கு மாறாக விளையாட்டில் திறனுடைய ஒருவனிடம் கணக்குச் செய்ய வைத்து இதைப்படி என்று திணிப்பதுதான் மூளைச்சுமை. இப்போது புரிகிறதா மூளைசசுமை என்ன என்பது.

எனவே பெற்றோர்களே! உங்கள் குழநதைகளின் அறிவு, திறன், புரிந்துகொள்ளும் ஆற்றல், தன்மை, நுட்பம் போனறவற்றை மனதில் கொண்டு அவர்களுக்குரிய கல்வியைப் புகட்டுஙகள். இல்லையெனில் மூளைச்சுமையால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடலாம்.

## நீங்கள் புத்திசாலியா?

"நம்முடன் கூட இருப்பவர்களை விட நமக்குச் செய்திகள் அதிகம் தெரிந்திருந்தாலும் நமது புத்திசாலித்தனத்தை வெளியே காட்டிக்கொள்ளக்கூடாது.

அதை ஒரு 'பாக்கெட் வாட்ச்' போல வைத்திருக்கவேண்டும். அதாவது அதை மறைவாகவே வைத்திருக்கவேண்டும். எவ்வளவுநேரம் போயிருக்கிறது என்று அதை அடிக்கடி எடுத்துப் பார்க்கக்கூடாது.

ஆனால் யாராவது மணிகேட்டால் எடுதது்ப் பார்த்துச்சொல்லவேண்டும்"

ஒரு புகழ்பெற்ற அப்பா தன் மகனுக்குச சொன்ன புத்திமதி இது. அந்த அப்பா வேறு யாருமல்ல 'செஸ்டர்பீல்டு' பிரபு.

# இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல - 45

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



பிரபலமான கதாநாயகிகளில் ஒருவரான இவர், சரித்திரக் காதலிகளில் ஒருவரின் பெயரைத் தனதாகக் கொண்டவர். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 31 ஆம் திகதிகு முனனர் கிடைககக்கூடியதாக அனுபபிவைக்கவும். நீங்கள் அனுப்பவேணடிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 45**
**'வலம்புரி ~ சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம.**

**குறிப்பு:-**

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளாகளுககு குலுககல முறைமூலம தெரிவுசெய்யபபட்டு பரிசு வழஙகப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயததில் பெற்றுக்கொள்ளவும.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல: – 45**

படத்தில் உள்ளவரின் பெயர் :-........................


அனுப்புபவரின் முழுப்பெயர் :-........................


அனுப்புபவரின் முகவரி :-........................

........................

........................

## இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 43
### சரியான விடை





**நடிகர் கமலஹாசன்**

**இவரைத் தெரியுமா பரிசுப்போடடி இல. 43இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | T.பிரதீபன், கே.கே.எஸ் வீதி, இணுவில். |
| இரணடாம் பரிசு | :- | க.கம்சிகா, சுதுமலை வடக்கு, மா[illegible]ிப்பாய். |
| மூன்றாம் பரிசு | :- | சந்திரவதனி, புலோலி. |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

என்.ஜே.இரத்தினதயா, ஏழாலை. தெ.திலீவ், யாழ்ப்பாணம். வே.குமாரசுவாமி, கரவெடடி. ம.பிரதீபன், கொக்குவில். செ.நித்தியவாணி, இருபாலை. ச.திலகபிரகாஸ், மானிப்பாய். சி.ஜெயருக்ஷன, சுனனாகம். P.S.ராணி, சங்கானை. K.தர்ஷினி, தம்பசிட்டி. மு.பிறேமினி, மானிப்பாய். கே.அரசேஸ்வரன், நல்லூர். சு.துஷிதா, அல்வாய். ம.மைதிலி, கோண்டாவில். இ.சரண்யா, காரைநகர். தி.பிருந்தா, யாழ்ப்பாணம். ச.டிக்சன, மானிப்பாய. இ.வதனி, வட்டுக்கோட்டை. இ.வாசவன், யாழ்ப்பாணம. பொன்.குணரத்தினம், குருநகர். T.S.சங்கீதா, சம்பூரணி, வட்டுக்கோட்டை. இ.கோபினா, புங்குடுதீவு. சி.கோவிந்தராசன், நல்லூர். மு.சோபகா, கோண்டாவில. வி.இளங்கோ, கோப்பாய். லோ.அபிராமி, வல்வெட்டி. த.சுரேஸ்குமார், குப்பிளான். V.C.சோதிநாதன், பண்ணாகம். க.பகிமிலா, புத்தூர். சொ.நித்தியா, கொக்குவில்.

# "தைப்பூசம் காணாது

சைவத்தமிழ் மக்களின் சிறப்பான திருநாட்களில் தைப்பூசம் மேன்மையான இடத்தைப் பெறுகின்றது. "தைபிறந்தால் வழி பிறக்கும்" என்பது நம் முன்னோா நம்பிக்கை. ஏனெனில் தைமாதத தில் தான் உழவர்களின் உழைப்பு வீடு வந்து சேரும் மாதமாகும். அத்துடன் தனது உழைப்பின் பயனை அனுபவிக்கும் காலமும இதுவேயாகும். இத்தகைய சிறப்பு மிக்க மாதத்தில் வருவதே தைப்பூசத் திருநாளாகும். இத தினத்தில் தான் உழவன் தான் உழைத்ததன் பயனாகக் கிடைத்த

துபபட அமைந்த பாடல் தைப்பு,சத்தின சிறப்பினை உணர்த்தும்.

அத்துடன், தைப்பூசவிழா பெண்கள் கொண்டாடும் விழாவாகவும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் காலத்திலிருந்தே வழக்கில் இருநததாகக் கொள்ளமுடியும். சோற்றை நெய்யுடன் கலந்து இறைவனுக்குப படைக்கும் மரபையும் திரு ஞான சம்பந்தர் கூறுகின்றார். இம்மரபை வைணவ மரபிலும் காணமுடியும். ஆண்டாள் பெரு மாட்டியும "நெய்பெய்து முழஙகை வழி

காணத் தவமனுட்டிக்கும் வியாக்கிரபாத முனிவருக்கும் ஆதிசேடளுக்கும் தம் நடனக் கோலத்தை ஆடிக்காட்டிய சிறப்பு மிக்க நன்னாளும் இத்தைப பொதுவாக அமைகின்றது. தாருகாவனத்தன் கண் வாழ்ந்த முனிவர்களின் கர்வத்தை அடக்குவதற்காக மகாவிஷ்ணு மோகினியாகவும் சிவபிரான் பிச்சாடராகவும் வடிவம்கொண்டு சென்றமையை விஷ்ணுபிரான் ஆதிசேடனுக்கு கூரைத்தார். இதனைக்கேட்ட ஆதிசேடனும் தானும் இக்கூத்தைக் காண

# போதியோ பூம்பாவாய்"

நெல் மணிகளைப் பக்குவப் படுத்தித் தனது இல்லத்துக்குக் கொண்டுவந்து விழா எடுக்கின்றான். இதன் மூலம உணவு வளமும் உணர்வு வளமும் பெருக்கும் விழாவாக தைப்பூசவிழா அமைகின்றது. உணர்வு பெருகினால் தான் உயிர் தழைக்கும். உணர்வு தழையாத போது உணவினால் பயனில்லை.

திருஞானசம்பந்தப் பெருமான் தனது திருப்பதிகத்தில் தைப்பூசத்தின் மேன்மையைப் பாடுகின்றார்.

**மைப்பூசும் ஒண்கண் மடநல்**<br>
**லார் மாமயிலைக்**<br>
**கைப்பூசு நீற்றான் கபாலீச்சுரம்**<br>
**அமர்ந்தான்**<br>
**நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரி**<br>
**ழையார் கொண்டாடும்**<br>
**தைப்பூசம் காணாதே போதியோ**<br>
**பூம்பாவாய்.**

பூம்பாவாய் என்ற பெண் இறந்தபோது "பெண்கள் கொண்டாடும் தைப்பூசத் திருநாளைக் காணாது இறந்து விட்டாயே நீ பிறந்ததும் இப்பூசத் திருநாளைக் காணும் பலன் பெறாது போய்விட்டாயே'' என்ற கருத்

வாரக்...'' என்ற அடி மூலம் இதனை உணர்த்துகின்றார்.

பன்னிரு இராசிகளில் கர்க்கடக இராசியில் அங்கம் வகிக்கும் இப்பூசத் திருநாளின் சிறப்புப் பற்றிப் புராண, இதிகாசங்கள், திருமுறைகள் எடுத்துக் கூறுகின்றன. புதிதுண்ணல்,ஏடு தொடககுதல் போன்ற புணணிய கருமங்களும் இத்தினததிலேயே ஆற்றப்படுகின்றது. இத்தினத்தை பௌத்தமத மக்களும் ஏற்றிப் போற்றுவர். ஏனெனில் புத்த பெருமான் ஞானம் பெற்ற தினமாகவும் இதனைக் கொள்வர் பௌத்தர்கள். சைவர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இவ்விழா பொதுவாக அமைகின்றது.

## கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

தாருகாவனத்தின் கண் வாழ்ந்த முனிவர்களின் கர்வத்தை அடங்குவதற்காக மகாவிஷ்ணு மோகியிாகவும் சிவபிரான் பிச்சாடனாராகவும் வடிவங்கொண்டு செனறமையை விஷணு ஆதிசேடனுக்கு உரைத்தார். இதனைக்கேட்ட ஆதிசேடனும தானும் இக் கூத்தைக்

தவம அனுட்டிக்கும் வியாக்கிரபாத முனிவருக்கும் ஆதிசேடனுக்கும் தம் நடனக் கோலத்தை ஆடிக்காட்டிய சிறப்பு மிக்க நனனாளும் இத் தைபூசத்திருநாளே ஆகும். இதனை உணர்த்தவே தைப்பூசத் திருநாளில் சிவன் கோவல்களில் பிச்சாடனர் உற்சவம் நடைபெறுவது வழமையாகும். பூசத் திருநாளில் பொன்னார் சடைப் புண்ணியனைப் பேரற்றி வழிபடுவது சைவசமய மக்களின் கடமையாகும்.

இத்தைப் பூசமானது வியாழக்கிழமையும் சித்தயோகமும் பூரணை தினமும் கூடிவரப் பெறறால் அதுவே சிறந்ததாகும். சைவர்கள் தாம் வாழுமிடமெல்லாம் இத்திருநாளைப் பெருவிழாவாகக் கொண்டாடுவர். ஆலயங்கள், இல்லங்கள் எங்கும் புனிதம் பேணி வழிபடுவர். இத்தினத்தில் இறைவழிபாடு செய்து நம் பாவங்களை அகற்றி நல்வினைகள் செய்து இன்புற்று வாழ்வோமாக.

*நன்றி: அருள்ஒளி*

# அரசியல் ஒற்றுமை குறித்து பேசிவரும் ஜனாதிபதி எஸ்.பியை விடுதலை செய்வாரா?

(கொழும்பு)

அரசியல் கைதியாக சிறை வைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதிக்கு சிறந்த சந்தர்ப்பமொன்று கிடைத்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

"சுனாமி'' பேரலை அனர்த்தத்திற்கு பின்னர் ஜனாதிபதி அடிக்கடி அரசியல் ஒற்றுமையைப்பற்றி பேசி வருகின்றார்.

நாம் அரசியல் பேதங்களை மறந்து ஒனறிணைந்து நாட்டை கட்டியெழுப்புவோம் என்று பேசி வரும் ஜனாதிபதி அதனை செயலிலும் நிரூபித்துக்காட்ட வேண்டும் என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க.

எஸ்.பி.திஸநாயக்க ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்புச் செயலாளர்.

அததுடன் செயற்பாட்டு ரீதியான ஆர்வமுடைய அரசியல்வாதி.

அவரை சிறைக்கைதியாக வைத்துக்கொண்டிருப்பது நியாயமற்ற செயலாகும் என்றும,

அவரை விடுதலை செய்யும அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. எனவே,

ஜனாதிபதி இது விடயத்தில் நியாயமான முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கூறிச்சென்றார்.

எஸ்.பி.யின் விடுதலைப் போராட்டத்தை ஐக்கிய தேசிய கட்சி நிறுத்திவிடவில்லை எனறும்,

அவை "சுனாமி'' அனர்த்ததினால் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

(க-9)

# சட்டவிரோத மின்பாவனையால் சட்டபூர்வ பாவனையாளர்கள் அவதி

சாவகச்சேரி பகுதியிலுள்ள சில இடங்களில் சட்டவிரோதமான முறையில் மின்சார பாவனையைப் பெறுபவர்களால் அடிக்கடி மின்விநியோகம் தடைப்படுவது குறித்து சட்டபூாவமான மின்பாவனையாளர்கள் பெரிதும் அதிருப்தி கொண்டுள்ளனர்.

இதுகுறிதது இலங்கை மின்சாரசபையின் மின்பாவனையாளர்கள் சாவகச்சேரிக்கான மின்சார சபையின் உயா அதிகாரியிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இருந்த போதிலும்கூட சட்டவிரோத மின் பாவனையைப் பெறுகின்றவர்கள் எததகைய பயமுமின்றி சட்டவிரோத மின் பாவனையை அனுபவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ப-16)

# சுனாமியால் பலியானோர் ஆவியாக அலைகின்றனரா?

(கொழும்பு)

சுனாமி கடற்பேரலையினால் உயிரிழந்தவர்கள் ஆவியாக நடமாடுகின்றாாகள் என்ற அச்சம் கரையோரப் பிரதேச மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்பாராதவாறு திடீரென வந்த சுனாமி அலையால் உயிரிழந்தவர்கள் ஆவியாக அலைந்து திரிவதாகக் கூறும் கரையோரப் பகுதி மக்கள் மாலை நேரங்களில் வெளியில் நடமாட அஞ்சுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்த அசசம் இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, தாய்லாந்து ஆகிய தென்கிழக்காசிய நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக தாய்லாந்து மக்களும ஆவி, பேய், பிசாசு போன்றவற்றில் அதிக நம்பிக்கையுடையவர்கள். இதனால் அவர்களும், தமது நாட்டில் சுனாமிக்குப் பலியான ஆயிரக் கணக்கானோர் ஆவிகளாக நடமாடுவதாக நம்புகின்றார்கள்.

இதனால தாய்லாந்திலுள்ள மக்கள் மத்தியில் தோன்றியுள்ள அச்ச உணர்வை நீக்குவதற்கு அந்நாட்டின் பௌத்த மதகுருமார்கள் கடும் பிரயத்தனம் மேற்கொண்டுவருகின்றனராம்.

அதற்காக தம்மை மண்ணில் புதைத்துக்காட்டி மக்கள் மத்தியில் ஆவிகள் பற்றிய அச்ச உணர்வை நீக்க எத்தனிக்கின்றனராம்.

(க)



உரும்பிராய் இந்துக்கல்லூரியில் நேற்று சங்கமம் ஒளிப்பேழை வெளியீட்டு விழாவில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ்பிரேமச்சந்திரன், பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், ஆசிரியர் ந.விஜயசுந்தரம், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் உரையாற்றுவதையும், முதற் பிரதியை பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் வழங்க யாழ்.திருமறைக் கலாமன்ற பொதுச செயலாளர் ஜே.ஜோன்சன் ராஜ்குமார் பெறுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- சிவசங்கர், ஐங்கரன்).

# கோண்டாவில் கிழக்கில் தொடரும் சங்கிலி அறுப்பு

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஞான வைரவர் வீதியால் செனறு கொணடிருந்த வயோதிபப் பெண்ணொருவரின் சங்கிலி இனந்தெரியாதவர்களினால் அறுத்துச்செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் கந்தையா நல்லம்மா (வயது 70) என்பவருடைய 5பவுண் சங்கிலியே அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்று கொணடிருந்தவர்களினாலேயே இச் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை, கோண்டாவில் கிழக்கு செல்வநாயகம் வீதியில் கடந்த 21ஆம் திகதியும் மயில்வாகனம் தனபாலசிங்கம் என்பவருடைய 7பவுண் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டது.

குறித்த நபர் வீதியில் வநது கொண்டிருந்த போதே வீதியால் வந்தவர்களால் அறுத்துச்செல்லப்பட்டது. (க-130)

## மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன் 48

ஆகவே கி.பி.1440 தொடங்கி அக்காலத்தின் முன்னாக கி.பி. 948 வரை ஆதிச் சிங்கை ஆரியன் வரையும் தலைநகர்க் களம் ஒரே இடத்தில்தான் இருந்திருக்கிறது. அது தான் இறுதியில் நல்லூரில் சங்கிலித்தோப்பாகவும் அதைச் சார்ந்த நிலங்களுமாயுள்ளது. ஆகவே சங்கிலித்தோப்பு நல்லூரில் இருக்கிறது அது சிங்கைநகர் மதிலுக்குள்ளே இருக்கிறது. ஆகவே நல்லூர் நகர்க் களந்தான் சிங்கைநகர் களமாக நிருபணமாவதாக வருவதை யுமறிக.

## 40. பிறர் கருத்து

கைலாயமாலையில் வெளியான தனிப்பாடலில்
"இலக்கிய சகாப்தம் எண்ணூற்றெழுபதாமாண்டதெல்லை
அவர் பொலிமாலை மார்பனாம் புவனேகவாகு
நலமிகு யாழ்ப்பாண நகரிகட்டுவித்து நல்லைக்
குலவிய கந்தவேட்கு கோயிலும் புரிவித்தானே

என்ற பாட்டால் அமைச்சர் புவனேகவாகு சிங்கைநகரியைக் கட்டியதையும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கட்டியதையும் வரையறையாகவும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் அமைச்சராகிய ஒரு புருடன் மேலே அவ்விரண்டு செயலும் சொல்லப்பட்டிருக்கிறது. வண. சுவாமி ஞானப்பிரகாசர் 'யாழ்ப்பாண நகரி என்பது சிங்கை நகராயின் புவனேவாகு என்பது காலகதியிற் புகுந்த வழுவாயின் அக்கவி கூறும் ஆண்டுக் கணக்கு காலிங்கச் சக்கரவர்த்தி சிங்கைநகரைக் கட்டிய ஆண்ட காலம்' என்றும் கூறினார் (யா.வை.வி.பக் 66)





அப்பால் (நூல் பக் 106இல் செண்பகப்பெருமாளே புவனேகவாகுவாயினமையால் இரு பேருடையவனான இவனைத்தான் நலம்மிகும் யாழ்ப்பாணத்து நகரிகட்டுவித்து நல்லைக்குலவிய கந்தவேட்கும் கோயிலும் புரிவித்தானே எனப்பட்டது போலும் என்று முறையே 13ஆம் நூற்றாண்டில் கலிங்கமாகன் மேலும் 15ஆம் நூற்றாண்டில் உள்ள செண்பகப்பெருமாள் மேலும் தடுமாறிப் பொருள் பண்ணுவது காண்க. அதாவது பத்தாம் நூற்றாண்டில் உள்ள ஒரு புருடன் மேலே சொல்லப்பட்ட பாட்லை 13ஆம், 15ஆம் நூற்றாண்டில் உள்ள இரு வேறு புருடர் மேலே பொருள் பண்ணுவதைக் கவனிக்குக. இக் கூற்றுக்களால் இவர்கள் பொருள் வரையறையில்லாமல் தெளியாமல் சொல்வனவற்றை நோக்குக.

வண. சு.ஞா. தம். நூலை 1928ஆம் ஆண்டுவரையில் எழுதினார். இவர்க்குப் பின் 1933இல் செ. இ. யாழ்ப்பாணச் சரித்திரத்தை எழுதினார். அவரும் வல்லிபுரத்தில் சிங்கைநகர் உண்டாயிருந்த செய்தியைத் தன்நூலில் (செ.இ.யாச.பக்.10லும் 29 லும் குறிப்பிட்டதோடு "செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத் தலைநகருள் புகுந்து கண்டாரைக் கொன்றும் மாடமாளிகையை இடித்துத் தரை மட்டமாக்கினான்" என்றும் (நூல் பக்.74 இவன் நல்லூரிலே 1450 ஒரு புது நகர் எடுப்பித்து சிறீ சங்கபோதி புவனேகவாகுவென 17 வருடம் ஆட்சி செய்தான் என்றும் (நூல் பக்,75) இவனே கந்தசுவாமி கோயிலைக் கூடக் கட்டினான் என்றும் சொல்லியுள்ளார். இவர்கள் தமக்கு முன்னர் வைபவமாலை, கைலாயமாலை அமைச்சர் புவனேகவாகு தர்ன் நல்லூர் தலைநகரையும் நல்லூர்க்கந்தசுவாமி கோயிலையும் கட்டி இருக்கிறான் என்று சொல்லி இருப்பதை ஆதாரம் காட்டி மறுக்கவும் இல்லை. தம் புது கோட்பாட்டுக்கு ஆதாரம் காட்டி நிறுவவும் இல்லை. தம் மனம் போன வண்ணமே சொல்லி இருக்கின்றனர். ஆகையால் இவர் கூற்றுக்களை கடந்த உண்மைச் சம்பவங்களென்று நாம் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது.. இரண்டு புவனேகவாகுகள் ஒரு கந்தசுவாமி கோயில் கட்டினவர்களல்ல. ஒரு புவனேகவாகுதான் கட்டினது. குலசபாநாதன் அவர்கள் நல்லூர்க் கந்தசுவாமி என்னும் நூலில் (பக்23இல்) யாழ்ப்பாண வைபவம் என்னும் நூலில் தமிழ் அரசனின் வாசல்ஸ் தானமாகிய நல்லூரிலே 870 வருடத்தில் சிங்கையாரிய மகாராசனின் மந்திரியாகிய புவனேகவாகுவினாற் கட்டப்பட்டுப் போத்துக்கேயரால் இடிக்கப்பட்ட கந்தசுவாமி கோயில் என்று குறிப்யடப்பட்டுள்ளதாகக் காட்டுகிறார். அன்றியும் அவர் யாழ்ப்பாணம் கச்சேரியில் சைவ சமயக் கோயில்களைப் பதிவு செய்து வைத்திருக்கும் பழைய இடாப்பு ஒன்று உண்டு என்றும் அதனைத் தாம் பார்வையிட்டபோது கோயிற் குறிப்பு வரலாறு என்பதன் கீழ்.

கந்தசுவாமி கோயில் குருக்கள் வளவு என்ற காணியிற் கட்டப் பெற்றுள்ளது. இது தமிழ் அரசன் ஆரியச்சக்கரவர்த்தியின் பிரதம மந்திரி புவனேகவாகால் 884ஆம் ஆண்டளவிற் கட்டப்பெற்றது என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகக் காட்டுகிறார். (நூல் பக்.24) அன்றியும் அவர் துவைனம் அவர்கள் எழுதிய யாழ்ப்பாணப்பகுதி இந்து ஆலயங்களின் அட்டவணைப் புத்தகம் பார்க்க நேர்ந்ததாகவும் அதில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் குருக்கள் வளவு என்னும் காணியில் கட்டப்பெற்றுள்ளது. தமிழ் மன்னன் ஆரியச்சக்கரவர்த்தியின் பிரதம அமைச்சர் புவானக வாகரினால் கி.பி. 884 வரை கட்டப்பெற்றது என்ற குறிப்புக்களைக் கண்டதாகவும் கூறுகிறார். (நூல் பக்.25)

இங்கே இவர்கள் காட்டிய குறிப்புக்கள் அனைத்தும் கைலாயமாலைத் தனிப்பாடலில் இலக்கிய சகாப்தம் எண்ணூற்றெழுபதாமாண்டதெல்லை புவனேகவாகு நல்லைக் குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித்தானே என்று கூறப்பட்ட புவனேகவாகு அமைச்சர் புவனேகவாகுதான் என்று துணிவதற்கு மேலும் வலுவைக் கொடுககின்றன என்பது கவனிக்குக. இவை இங்ஙனமாக திரு.செங்கையாழியான் அவர்கள் ஈழநாடு இதழிலே கந்தவேள் கோட்டம் என்ற தலைப்பிலே அனேக கட்டுரைகள் எழுதி இருக்கிறார். அவற்றுள் 27-10-85 இதழிலே ஆரியச்சக்கரவர்த்தி என்றும் சிங்கை ஆரியன் என்றும் வழங்கப்படப் போகின்ற இவன் மந்திரியாகப் புவனேகவாகு என்பவர் இருந்தார். அவர் நல்லூரில் மந்திரி மாளிகைக்கருகில் தென்கிழக்கே அமைந்திருந்த குருக்கள் வளவு என்ற இடத்தில் (இன்றைய நல்லூர்க் கந்தன் ஆலயம் அமைந்துளள இடம்) கந்தவேளுக்குச் சிறிதொரு ஆலயம் அமைந்திருந்தார். முதலலாயம், இது இவரின் இக்கூற்று நாம் மேலே காட்டிய கூற்றுக்களுக்கொத்ததாம். நம்கூற்று அமைச்சர் புவனேகவாகுவே நல்லூர்த் தலைநகரையும் கந்தசுவாமி கோயிலையும் கட்டினான் என்பதே.

(தொடரும்)


தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ரி.சி.ரி. பல்பொருள் விற்பனை நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களையும் கலந்துகொண்டோரையும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு தியாகி அறக்கொடை நிறுவனம் வழங்கிய ஒரு தொகைப் புத்தகத்தை நுவுரேலியா பாராளுமன்ற உறுப்பினர் பி. சந்திரசேகரன் பாடசாலை அதிபரிடம் கையளிப்பதையும், தையல் பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு மல்லாக மாவட்ட நீதிபதி சறோஜினி இளங்கோவன் சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதையும், அறக்கொடை நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சக்கரநாற்காலியையும் படங்களில் காணலாம்

(படங்கள்:ஞா. ஐங்கரன்)

22.01.2005 சனிக்கிழமை

அமரத்துவம் அடைந்த

திரு. கந்தர் காசிநாதர் அவர்களுக்கு

நினைவு அஞ்சலி

எங்கள் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் 26 ஆண்டுகள் தொடர்ந்து அலுவலகக் கடமையாற்றும் சைவத் திரு.கா. சிவபாலன் அவர்களின் அன்புத் தந்தையாரின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கிறோம். அமரர் காசிநாதர் அவர்கள் இளைப்பாறிய ஆசிரியர். அத்துடன் மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயத்தின் அறங்காவலராக இருந்தவர். சிறந்த சைவ வாழ்வு வாழ்ந்தவர். 96 வயதைப் பூர்த்தி செய்த மகிமைக்குரியவர். மட்டுவில் பதியை நேசித்தவர். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து நிற்கிறோம்.

கலாநிதி செல்வி


தங்கம்மா அப்பாக்குட்டி

சமாதான நீதிபதி, தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை, யாழ்ப்பாணம்.

(9245)

# சங்கரராமனை தீர்த்துக்கட்டும்படி ஜெயேந்திரர் அப்புவிடம் கூறினார்

## அரசு தரப்பு சாட்சியாக மாறிய ரவி சுப்பிரமணியம் வாக்குமூலம்



காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கில் ஒப்பநதகாரர் ரவி சுப்பிரமியம் அரச சாட்சியாக மாறியதைத் தொடர்ந்து அவரது வாக்குமூலம் குற்றப் பத்திரிகையில் இடம்பெற்றுள்ளது. அவரது வாக்குமூலத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

சென்னை தியாகராய நகரில் நான பிறந்தேன். எனது தந்தை பெயர் பஞ்சாபகேசன். எனது உண்மையான பெயர் சுப்பிரமணியம். ஆனால் என்னை ரவி சுப்பிரமணியம் என்று அழைப்பார்கள். எனக்கு கிருஷ்ணமூர்த்தி, முரளி என்று இரண்டு அண்ணன்மார் உள்ளனர். நான் எம. ஏ. பட்டதாரி. எனது காதல் மனைவி சித்ரா. ஆனால் கருத்து வேறுபாடு காரணமாக எனது மனைவி, குழந்தைகள் பிரிந்து சென்று விட்டனர். எனக்கு தி.நகரைச் சேர்ந்த விசுவநாதன் நண்பரானார். விசுவநாதனின் மனைவி சரஸ்வதி என்ற நடிகை, அவரது சகோதரி லீலா ஆகியோருடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. ஜெயேந்திரருக்கு அறிமுகமான லீலா மூலம் எனக்கு ஜெயேந்திரர் அறிமுகமானார்.

1995 இல் தாம்பரத்தில் தங்கியிருந்த ஜெயேந்திரரைப் பார்க்க விசுவநாதன், சரஸ்வதியுடன் நானும் சென்றிருந்தேன். சரஸ்வதி தனியாக ஜெயேந்திரரை பார்த்து வந்தபோது வருத்தமாக வந்தார். ஜெயேந்திரர் தன்னிடம் தகாத முறையில் நடக்க முயன்றதாகவும் தான் சம்மதியாமல் கோபித்துக்கொண்டு வந்து விட்டதாகவும் தெரிவித்தார். நான் அந்த விஷயத்தை பெரிதுபடுத்த வேண்டாம் என்று சரஸ்வதியைக் கேட்டுக்கொண்டேன்.

அடுத்தநாள் ஜெயேந்திரரே சரஸ்வதியிடம் போனில் மன்னிப்புக் கேட்டார். இந்த சம்பவத்துக்குப் பின்னர் எனக்கும் ஜெயேந்திரருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. சங்கரமடம் தொடர்பான கட்டடங்கள் கட்டும் பணியை எனக்கு அவர் தந்தார்.

சங்கரமடம் நடத்தும் கல்லூரிக்கு ரூபா 1கோடியில் கட்டடம் கட்டும் பணியை ஜெயேந்திரர் என்னிடம் கொடுத்தார். அதை நல்ல படியாக முடித்துக் கொடுத்தேன். மேலும் அந்தக் கல்லூரிக்கு மாணவ மாணவியர் விடுதி கட்டும் பொறுப்பும் தரப்பட்டது.

கடந்த 1998ஆம் ஆண்டு திருவொற்றியூர் சங்கரா காலனி அமைக்கும் பொறுப்பை என்னிடம் ஜெயேந்திரர் ஒப்படைத்தார். அந்தக் காலனியில் ரூபா 12 கோடி செலவில் 333 வீடுகளைக் கொண்ட அடுக்குமாடிக் கட்டடத்தைக் கட்டுமாறு என்னிடம் கூறினார். அந்தக் காலனி அமைப்பதற்கு முன்புறம் இருநத ஆக்கிரமிப்புகள் தடையாக இருந்தன. அந்த ஆக்கிரமிப்புகளை நான் அகற்றிக் கொடுத்தேன்.

ஜெயேந்திரர் என்னிடம் மிகவும் பிரியமாக இருப்பார். அவருடைய பிறந்த நாள் விழாக்களில் நான் தங்கத்தினால் ஏதாவது பரிசுப் பொருள்களைக் கொடுப்பேன். அவரது 63ஆவது பிறந்தநாளில் நாலரை இலட்சம் ரூபாய் மதிப்பிலான தங்கக் கிரீடத்தைச் சூட்டினேன். 64ஆவது பிறந்தநாளிலும் அதே மதிப்பில் இன்னொரு தங்கக் கிரீடம் செய்து கொடுத்தேன. 65ஆவது பிறந்தநாளில் 65தங்கக் காசுகளைப் பரிசாகக் கொடுத்தேன்.

ஜெயேந்திரருக்கு நிறையப் பெண்களுடன் தொடர்பு உண்டு. பிரேமா, பத்மா, ரேவதி போன்ற பல பெண்கள் ஜெயேந்திரரை அடிக்கடி தனிமையில் சென்று பார்ப்பார்கள். அவருக்கு ஆபாசப்படம் பார்க்கும் பழக்கமும் உண்டு.

2001இன் இறுதியில் எனது நண்பர் சரவணன், அப்புவை ஜெயேந்திரரிடம அறிமுகப்படுத்தக் கூறினார். நான் அறிமுகம் செய்தேன். அப்புவுக்கு அரசு மூலம் நிறையத் தொல்லைகள் இருப்பதாகவும அதைச் சரி செய்ய ஜெயேந்திரரின் உதவி தேவைப்படுவதாகவும், சரவணன் என்னிடம் கூறினார். அதன்படி அப்புவை காரில் நான் காஞ்சிபுரம் அழைத்துச் சென்று ஜெயேந்திரரிடம் அறிமுகம் செய்து வைத்தேன். அப்புவுக்கு அரசுமூலம் உள்ள பிரச்சினைகளை எடுத்துச் சொன்னேன். அதைக்கேட்ட ஜெயேந்திரர் இன்னொரு நாளில் தன்னை வந்து சந்திக்குமாறு கூறினார். அதன்படி இன்னொருநாள் நான், அப்பு, கதிரவன் ஆகிய 3 பேரும் ஜெயேந்திரரை சந்தித்தோம்.

அப்போது அவர் எங்களிடம் தன்னை 2பேர் பிளாக்மெயில் செய்கிறார்கள். அதற்கு ஏதாவது செய்யவேண்டும் என்று கூறினார். அதற்கு அப்பு , அதுபற்றிக் கவலை வேண்டாம் என்று ஜெயேந்திரரிடம கூறினார். இதைத் தொடர்ந்து ஒரு நாள் காலை 8மணிக்கு ஜெயேந்திரர் தன்னை சந்திக்குமாறு என்னை அழைதது தார். நானும் அதன்படி சென்று அவரைச சந்தித்தேன்.


அப்போது விஜயேந்திரரின் தம்பி ரகு உடனிருந்தார். பின்னர் ஆடிட்டர் இராதாகிருஷ்ணன், வரதராஜப் பெருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் ஆகியோரின் பாஸ்போர்ட் அளவு போட்டோக்களை என்னிடம் தந்தனர். நான் அந்தப் படங்களை எனது உறவினர் சந்தானம் மூலம் கதிரவனிடம் கொடுத்து அனுப்பினேன். அதன்பிறகுதான் இராதாகிருஷ்ணன் தாக்கப்பட்டார்.

இராதா கிருஷ்ணன் தாக்கப்பட்டதை ஜெயேந்திரரே போனில் என்னிடம் தெரிவித்தார். மேலும் இராதாகிருஷ்ணன் தாக்கப்பட்டதற்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதைக் காட்டுவதற்காக சங்கரமடத்தின் ஏஜெண்டு நீலகண்ட அய்யர், நெய்வேலி கிருஷ்ணமூர்த்தி ஆகியவர்களை அனுப்பி இராதாகிருஷ்ணனைப் பார்த்து வரச் செய்தார்.

ஜெயேந்திரர் கொடுத்தனுப்பிய பிரசாதத்தை இருவரும் இராதாகிருஷ்ணனிடம் கொடுத்துவிட்டு வந்தனர். இதற்கிடையே இராதாகிருஷ்ணனை தாக்கியதற்காக ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய பெரிய பணக்கட்டு ஒன்றை ஜெயேந்திரர் என்னிடம் கொடுத்தார். அதை நான் கதிரவனிடம் கொடுத்தேன்.

1.9.2004இல் நானும், அப்புவும், கதிரவனும் ஜெயேந்திரரைச் சந்தித்தோம். இறுதி அறிவிப்பு என்ற தலைப்பில் சங்கரராமன் எழுதிய கடிதத்தை ஜெயேந்திரர் அப்புவிடம்கொடுத்து இனிமேல் இப்படி ஒரு கடிதம் வரக்கூடாது என்று கூறினார். சங்கரராமனை தீர்த்துக்கட்டும்படி ஜெயேந்திரர் அப்புவிடம் தெரிவித்தார். ரூபா 50லட்சம் செலவானாலும் பரவாயில்லை என்று தெரிவித்தார். பணத்துககான ஏற்பாட்டை ரகு செய்வார் என்று விஜயேந்திரர் எங்களிடம் தெரிவித்தார். வரும் வழியில் சங்கரராமனை முடித்துவிடும்படி அப்பு கதிரவனிடம் தெரிவித்தார்.

மறுநாள் நானும், கதிரவனும் போர்டு காரில் காஞ்சிபுரம் வந்துகொண்டிருந்தோம். வரதராஜப்பெருமாள் கோவில் அருகே இறங்கினோம். கதிரவன் செல்போனில் பேசவும் சின்னான் வந்தார். சங்கரராமன் வீட்டை கதிரவன் சின்னானுக்கு அடையாளம் காட்டினார். அன்றே சங்கரராமன் கதையை முடித்துவிடும்படி சின்னானிடம கதிரவன் கூறி ரூபா 10ஆயிரத்தையும் கொடுத்தார்.நாங்கள் ஜெயேந்திரரை சந்தித்து விபரம் சொல்லிவிட்டு சென்னை வந்தோம்.



மறுநாள் 3.9.2004 மாலை அப்பு எனக்கு போன் செய்து சோழா ஹோட்டலுக்கு வரும்படி சொன்னார். நான் அங்கு சென்றபோது அங்கே கதிரவனும் இருந்தார். அப்போது கதிரவனுக்கு செல்போன் வந்தது. அதையடுதது கதிரவன் சங்கரராமன் கதை முடிந்துவிட்டதாகச் சைகை மூலம் தெரிவித்தார்.

சங்கரராமன் கொலைக்கு கூலியாக ரூபா 10லட்சத்தை அப்புமூலம் கதிரவனுக்கு கொடுத்தேன். பணம் பெற்றதற்கு அப்புவிடம் கையெழுத்தும் வாங்கினேன்.

மறுநாள் அதிகாலை 4மணிக்கு விமானத்தில் நான் மும்பை சென்றுவிட்டேன். மும்பையில் செம்பூரில் தங்கியிருந்தேன். மும்பை புறப்படும் முன் நான் ஜெயேந்திரரிடம் போனில் பேசினேன். ஒருநாள் மட்டும் மும்பையில் தங்கிவிட்டு மறுநாள் மீண்டும் சென்னைக்கு வந்துவிட்டேன். சென்னை வந்ததும் பிள்ளையார்பட்டி விநாயகர் கோவிலுக்கு சென்று சாமி கும்பிட்டேன்.

செப்டெம்பர் 6ஆம் நாள் - கிருஷ்ண ஜெயந்தி அன்று- நான் ஜெயேந்திரரை மீண்டும் சந்தித்தேன். அப்போது ஒரு அலுமினிய பெட்டியில் ரூபா 50 இலட்சத்தை வைத்துக் கதிரவனிடம் கொடுக்குமாறு ஜெயேநதிரர் சொன்னார். நான் சொன்ன காரியத்தை முடித்துவிட்டாய் என்று கூறி 5கிலோ இனிப்பும் வழங்கினார்.

இந்த நிலையில் இந்த வழக்கை பொலிஸார் தீவிரமாக விசாரிப்பதை அறிநதவுடன் ஜெயேந்திரரை நான் போய்ப் பார்த்தேன். அவர் கால்மேல் கால் போட்டு உட்கார்ந்த நிலையில்,

இந்த விஷயம் வெளியே தெரிந்தால் கையை உன் மீது காட்டிவிடுவேன். என்னைக் கைது செய்தால் இந்தியாவே குலுங்கும். இந்த அரசே இருக்காது. எனக்கு எந்தப் பிரச்சினையும் வராது என்று கூறினார்.

இந்த நிலையில் 10 நாட்கள் கழித்து கதிரவன் என்னைச் சந்தித்து ரூபா 20 இலட்சம் கேட்டார். 5 போலி குற்றவாளிகளைக் கோர்ட்டில் ஆஜர் செய்வதற்காக இந்தப் பணம் தேவைப்படுவதாகக் கூறினார். நானும் ஜெயேந்திரரை சந்தித்து அந்தப் பணத்தை கேட்டேன். ரூபா 20இலட்சம் கிடைத்தது. அதை சென்னை அமராவதி ஹோட்டலில் வைத்து அப்புவிடம் கொடுத்தேன். அதன்பின்னரே போலி குற்றவாளிகள் கோர்ட்டில் சரணடைய வைக்கப்பட்டனர்.

இதை ஜெயேந்திரரிடம் தெரிவித்தேன். அவர் சந்தோஷப்பட்டார். கதிரவன் பொலிஸாரிடம் சிக்கியதும் ஜெயேந்திரா ஆந்திராவுக்குச் சென்றுவிட்டார். நானும இந்தியா முழுவதும் பல்வேறு ஊர்களுக்குச் சென்று சுற்றத் தொடங்கினேன். கடைசியில் குருவாயூரில் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தபோது பொலிஸார் என்னைக் கைது செய்தனர். (து)

## பிலிப்பைன்ஸ் மருத்துவகுழு வட-கிழக்கில் பணியாற்றும்

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கவென 38 பேர் கொண்ட பிலிப்பைன்ஸ் நாட்டு மருத்துவர் குழுவினர் நேற்றுக் காலை இலங்கை வந்தடைந்தனர்.

இக்குழுவினர் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ சேவையினை வழங்குவார்கள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரை 60 நாடுகள் 70 வைத்தியர்களை அனுப்பி இலங்கைக்கு மருத்துவ சேவையினை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்ட சுகாதார அமைச்சா,

அந்நாடுகளுக்கு இலங்கை அரசு மிக கடமைப்பட்டுள்ளதாகக் கூறினார். (க)

### பயிற்சி

(மருதங்கேணி)

டென்மார்க் அரசாங்கம் பத்து நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை தமிழர் புனர்வாழ்வு கழகத்தினருக்கு வழங்கியுள்ளது.

இவை சுமார் 3மில்லியன் பெறுமதியுடையவை. இவற்றைப் பயன்படுத்தும் முறைகள் பற்றி தமிழர் புனர்வாழ்வு கழகத்தினருக்கு பயிற்சி அளிப்பதற்காக 4 தொழில்நுட்பவியலாளர்கள் திருகோணமலைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ப-35)

### கோரிக்கை

(மருதங்கேணி)

யாழ். மாவட்டத்திலுள்ள கரையோர பகுதிகளை வரும் சித்திரை மாதப் பிற்பகுதியில் ஏற்படும் வழமையான கடற்கொந்தளிப்புக்கு முன்னர் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு கடற்தொழிலாளர் சங்கங்களின் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

வடமராட்சிக்கு விஜயம் செய்த மத்திய சுற்றாடல் அதிகார சபை பிரதி நிதிகளிடம் இக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ப-35)

அற்றார் அழிபசி தீர்த்த அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்பூழி - குறள்

வலம்புரி

# பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுப்பனவுகள் கிடைக்கட்டும்

இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட பேரழிவுக்கான நிவாரணப்பணிகள் நாலாபக்கமும் இருந்தும் வந்தவண்ணம் உள்ளன. சர்வதேச சமூகம் உட்பட நாட்டிலுள்ள அனைவரும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் அக்கறைகொண்டுள்ளமை மன ஆறுதலைத் தருவதாகவுள்ளது.

அதேநேரம் வழங்கப்படும் நிவாரணக் கொடுப்பனவுகள் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சீராகக் கிடைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படவேண்டும். நிவாரணப் பணிகளில் ஈடுபடும் ஒவ்வொரு அமைப்பும் சுயமாகச் செயற்படுமாயின் பாதிக்கப்பட்ட ஒருபகுதியினருக்கு நிவாரணப் பொருட்கள் கிடைக்க இன்னொரு பகுதியினருக்கு எந்தக் கொடுப்பனவுகளுமே கிடைக்காமல்போகும் சந்தர்ப்பங்கள் உண்டு.

எனவே இதுவிடயத்தில் செம்மைப்படுத்தப்பட்ட திட்டமிடலும், முகாமைத்துவமும் தேவையானதாகும். அதேவேளை பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான ஒரு சீரான தகவல் சேகரிப்பும் முக்கியமானதொன்றாகும்.

யுத்தகாலங்களில் ஏற்பட்ட இடப்பெயர்வு, உயிரிழப்பு, சொத்தழிவு ஆகிய இழப்புக்களான நிவாரணக் கொடுப்பனவுகளில் நடந்தமுறைகேடுகள், ஒழுங்கீனங்கள் யாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் ஒழுங்கான முறையில் தரவுகளைச் சேகரிக்காமையே ஆகும். குறிப்பாக அந்தந்த கிராமசேவையாளர்கள் தத்தம் பகுதிகளில் ஏற்பட்ட இழப்புகளை ஒழுங்கான முறையில் புள்ளிவிபர அடிப்படையில் சேகரிப்பதன் மூலம் நிவாரணக் கொடுப்பனவுகளில் ஒழுங்குபடுத்தலை - ஒரு நியாயத்துவத்தை ஏற்படுத்தமுடியும்.

மேலும் இயற்கை அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்பு விடயத்தில் விசேட கவனம் செலுத்தப்படுவதும் அவசியமாகும். உயிரிழந்த குடும்பங்களுக்கு அரச அதிபரினால் 2 ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட போதிலும் அந்தத் தொகை போதுமானதல்ல என்ற உண்மை எல்லோராலும் உணரப்பட்டதொன்றே.

எனினும் உறவுகளின் உயிரற்ற சடலங்களை வைத்துக்கொண்டு அழுதுபுலம்பும் குடும்பங்களுக்கான உடனடிக்கொடுப்பனவாக ஆகக்குறைந்தது 10 ஆயிரம் ரூபாவேனும் வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அதுவிடயத்தில் யாருமே கவனம் செலுத்தாமை வேதனை தரக்கூடிய சம்பவம் ஆகும்.

அரசினால் உடனடியாக நிவாரணத்தொகை வழங்கப்பட்டவில்லை என்ற காரணங்கள் இருப்பினும் ஏதேனும் மாற்றுவழிகளைப் பின்பற்றி அந்த உதவு தொகையை அதிகரித்திருந்தால் அது பாராட்டப்படக் கூடியதாக இருந்திருக்கும். அத்தகையதோர் சூழ்நிலை உடனடச் சாத்தியமற்றதாக இருப்பினும் இனி மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கான நிதிக்கொடுப்பனவை விரைவுபடுத்துவது முதன்மைப் பணியாகும்.

இவையொருபுறம். மறுபுறத்தில் நிவாரணக் கொடுப்பனவுகளில் நிலவும் காலதாமதம் குறைக்கப்படுவது மிகவும் அவசியமாகும். இதுவிடயத்தில் அரசின் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்படவேண்டும். சர்வ தேச சமூகம் நிவாரணப் பணிகளை வழங்கிவருகின்ற போதிலும் அவை மக்களைச் சென்றடைவதில் கால தாமதம் ஏற்படுமாயின் அதனால் எந்தப் பயனும் இல்லாமல்போவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

எனவே இந்தத் தடவையும் எந்தத் தடங்கலும் இல்லாமல் சர்வதேச சமூகம் வழங்கும் நிவாரணப் பொருட்கள் பாதிப்பட்ட மக்களைச் சென்றடைவதை உறுதிசெய்வது அனைவரதும் கடமையாகும்.

இங்கும் இன, மத, மொழி வேறுபாடுகள் தலை தூக்குமாயின் அத்தகையதொரு குறைபாடுவுக்கு அரசு இடம்கொடுக்குமாயின் நிலைமை மிகமோசமாக மாறிவிடும் என்ற உண்மை உணரப்படவேண்டிய தொன்றாகும்.

இலங்கையில் சிங்களப் பெரும்பான்மை இனம் தமிழர், முஸ்லிம்களை சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் வகுத்து அவர்களுக்கான உரிமைகளைக் கூட வழங்கமறுத்து வருகிறது. ஆனால் இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தமானது இன, மத, மொழி என்ற பேதங்கள் எதனையும் பாராது மனித உயிர்களைக் காவுகொண்டுள்ளது.

இயற்கை அனர்த்தம் ஆயிரக்கணக்கான மனித உயிர்களைக் காவுகொண்டதன் மூலம் ஒரு உண்மையை உணர்த்தியுள்ளது. அந்த உண்மை இன, மத, மொழி கடந்த சமத்துவமாகும். இதனை அரசு உணர்ந்துகொண்டு சர்வதேச நிவாரண உதவிகளை பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் கிடைகக்கூடிய வகையில் விரைவாக வழங்கவேண்டும்.

# அமைச்சரின் பெயரைப் பயன்படுத்தி பணம் வாங்கியவர் மாட்டுப்பட்டார்

(புத்தளம்)

இத்தாலியில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி, ஒவ்வொரு இளைஞரிடமும் தலா 50 ஆயிரம் ரூபா பெற்ற வென்னப்புவ பிரதேச இளைஞரொருவர் குறித்து பாராளுமன்ற கிறிஸ்தவ விவகார அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ சிலாபம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டில் அமைச்சர் மேலும குறிப்பிட்டுள்ளதாவது,

சுனாமியினால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு, இத்தாலியில் தொழில் பெற்றுத் தருவதற்கென நான் நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறி, அவ்விளைஞரிடம் இந்தப் பணத்தை அறவிட்டுள்ளார்.

ஆனால் இந்த சம்பவத்துக்கும் எனக்கும் எவ்வித தொடர்புமில்லை.

எனவே எனது பெயருக்கு அபகீர்த்தியினை ஏற்படுத்தும் வுகையில் செயற்பட்டு வருகின்ற பிரஸ்தாப இளைஞருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்முறைப்பாட்டில் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (க-15)

# அவுஸ்திரேலிய அமைச்சர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் டாக்டர் திருமதி புருசுலு பிளஸ்நிக் இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுக் காலை இலங்கை வந்தடைந்தார்.

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என அவுஸ்திரேலியாவினால் வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் உரிய முறையில் மக்களைச் சென்றடைந்ததா என்பது குறித்து இவர் அறிந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் தேவைப்படும் உதவிகள் குறித்தும் இவர் கேட்டறிவார் எனக் கூறப்படுகிறது. (க-60)

# புத்தர் சிலை வைத்திருந்த வரை பொலிஸார் கைது செய்தனர்

(புத்தளம்)

500 வருடங்கள் பழமை வாய்ந்த புத்தர் சிலையொன்றை வைத்திருந்த நபரொருவரை சாலியவெவ பகுதி வீடொன்றில் வைத்து கருவலகஸ்வெவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமாக புத்தர் சிலைகளை வைத்திருப்பதாக கிடைத்த தகவலொன்றை அடுத்து குறிப்பிட்ட நபரைக் கைது செய்த பொலிஸார், விசாரணைகளை மேற் கொண்டபோது, இப் புராதன சிலை சட்ட விரோதமாக அகழ்ந்தெடுக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

5கிலோ எடையும் 17 சென்றி மீற்றர் நீளமும்,16 சென்ரி மீற்றர் உயரமும் கொண்ட இந்த புத்த சிலையினை அகழ்வாராய்ச்சி திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக கருவலகஸ்வெவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச். கருணாதிஸ்ஸ தெரிவித்தார். (க-5)

# கசூர்னா கடற்கரையில் காதல் ஜோடி சிக்கியது

(காரைநகர்)

காரைநகர் கசூர்னா கடற்கரையில் கலாசாரச் சீரழிவில் ஈடுபட்ட இளம் காதல் சோடிகள் இருவர் கலாசாரத்தை பேணும் குழுவினரிடம் அகப்பட்டுக கொண்டனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, கடந்த வாரம் வியாழக்கிழமை கசூர்னா கடற்கரையில் சந்தேகத்திற்கிடமான முறையில் தனிமையான இடத்தில் இரு இளம் சோடியினர் நின்றதை அவதானித்த பொதுமக்கள் கலாசாரத்தை பேணும் குழுவினருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த கலாசாரத்தை பேணும் குழுவினர் கலாசார சீரழிவல் ஈடுபட்ட இருவரையும் விசாரணை செய்த போது தாம் இருவரும் சுழிபுரத்தைச் சார்ந்தவர்கள் என தெரிவித்தார்கள்.

பின்னர் இவ் இருவரையும் அவர்கள் எச்சரித்து விடுவித்துள்ளனர். (ப-246)

# தேசிய எழுச்சிப் பேரவை உதவி

(தென்மராட்சி)

சுனாமி பேரலையின் காரணமாக பலியான 61 பேரின் நினைவாக யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை தலா 5ஆயிரம் ரூபா வீதம்மொத்தம் 3 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி தும்பளை லூர்த்துமாதா ஆலயம்,தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம், வடஇந்து மகளிர் கல்லூரி மற்றும் இன்பருட்டி வித்தியாலயம் ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பலியான உறவினர்களிடம் இந்நிதியை தேசிய எழுச்சி பேரவையின் யாழ்.மாவட்ட செயலாளர் சொலமன் சூ.சிறில் மற்றும் ஊடகப்பேச்சாளர் ப.கனகலிங்கம் ஆகியோர் வழங்கிவைத்தனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுப்பதற்கென தேசிய எழுச்சிப்பேரவை 5 இலட்சம் ரூபா நிதியை மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுதலைப்புலிகளின் பொறுப்பாளர் கேணல் பானுவிடம் கையளித்துள்ளமை குறிப்படத்தக்கது. (ப-16)

# ரி.சி.ரி.பல் பொருள் விற்பனை நிலையம் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ரி.சி.ரி. பல்பொருள் விற்பனை நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினர் பெ. சந்திரசேகரனும் கெளரவவிருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ்ஜும் சிறப்பு விருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிபதிசறோஜினி இளங்கோவனும் விருந்தினர்களாக யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் விக்னேஸ்வரன், பொருணமிய மேட்பாட்டு நிறுவன யாழ். மாவட்ட பொறுபபாளர் தேவா, அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் ச. பரமநாதன், சக்திவேல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தையல் பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு மல்லாக மாவட்ட நீதிபதி சறோஜினி இளங்கோவன் சான்றிதழ்களை வழங்கி கெளரவித்தார்.

மேலும் தியாகி அறக்கொடை நிறுவனத்தினால் சாவகசசேரி டிறிபேக் கல்லூரிக்கு ஒரு தொகை புத்தகங்கள் வழங்கப்பட்டன.

இப்புத்தகங்களை டிறிபேக் கல்லூரி அதிபரிடம் நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் வழங்கினார்.

இத் தியாகி அறக்கொடை நிறுவனத்தினால் ஊனமுற்ற ஒருவருக்கு சக்கரநாற்காலி ஒன்றும் வழங்கப்பட்டது. (க-19,85)

# நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சர்வோதயம் அமைப்பின் சிரேஷட நிறைவேற்று உதவியாளராக கிருஸ்ணசாமி சிவசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார். 01.01.2005 இல் இருந்து இவர் இப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (க-19)

# சுனாமி அலை வீச்சினால் வடமராட்சி வடக்குப் பகுதியில் 3600 படகுகள் சேதமாகின

(தென்மராட்சி)

சுனாமி பேரழிவின் காரணமாக யாழ்பபாணம் மாவட்டத்தில் உள்ள வடமராட்சி கிழக்கு வடமராட்சி வடக்கு பிரதேசங்களில் சுமார் 3ஆயிரத்து 600 மீன்பிடி படகுகள் சேதமடைந்துள்ளன.

இந்த வகையில மூஃறரை தொன்படகுகள் 89ம் ஈ.ஆா.பி.படகுகள 880ம் பாரம்பரியபடகுகள் 124ம் இயந்திரப்படகுகள் அல்லாதவை 24 47ம் பீ.ச். படகுகள் 60ம் ஆக மொத்தம் 3ஆயிரத்து 600 படகுகள் மீனவர்களால் தொழிலுக்குப்பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் அறியப்படுகின்றது.

அத்துடன் இப்பகுதிகளில் இருக்கும் கடற்தொழிலாளர்களால் பயன்படுத்தப்பட்ட பலவகைப்பட்ட மீன்பிடி வலைகளும் ஏனைய உபகரணங்களும் கூட சுனாமி பேரழிவின்போது சேதமைந்துள்ளன.

இதேசமயம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் 1662 மீன் பிடிபபடகுகளும் மட்டக்களப்பில் 3315ம் திருகோணமலையில் 2630ம் முல்லைத்தீவில் 1871ம் கிளிநொச்சியில் 620ம் யாழ்பபாணத்தில் 3600 ம் ஆக மொத்தம் 13 ஆயிரத்து 968 மீனபிடி படகுகள சேதமடைந்துள்ளன இவற்றின் பெறுமதி 3 ஆயிரத்து 800 மில்லியன் ரூபா என கணிப்பிடப்பட்டுள்ளது. (ப-16)

# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

துறந்து விடுங்கள்! தியாகம் செய்யுங்கள்! விட்டுவிடுங்கள் பூஜ்யத்திற்காக, அல்ல உயர்நததை அடைவதற்காக. ஆனால் இதை யாரால் செய்ய முடியும்? உயர்ந்தது கிடைக்காத வரை உங்களால் முடியாது. நீங்கள் பேசலாம். நீங்கள் பேராடலாம். பலகாரியங்கள் செய்யநீங்கள் முயலலாம் .ஆனால் உயர்ந்தது கிடைத்ததும் துறவுதானாக வந்து சேரும். கீழானது அப்போது தானாகவே விலகிவிடும்.

சுவாமி விவேகானந்தர்

## முஸ்லிம்...

தற்கு எந்தவித தடைகளும் இல்லை.

புதிதாக குடியமர்வதாயின் சிவில் அதிகாரிகளின் அனுமதியுடன் விடயம் கையாளப்பட வேண்டும். விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளைமுன்னெடுக்க முடியும். இதற்கு எவ்வித வரி அறவீடுகளும் இருக்காது என விடுதலைப்புலிகளினால் உறுதிவழங்கப்பட்டது.

(த-8)

## விபத்தில்...

மலை) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

இவரது வித்துடல் இன்று பிற்பகல் 3மணிக்கு கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பின்னர் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

(ச-101)


கன்னிகாதானம்

வட்டுக்கோட்டை நாகலிங்கம் தம்பதிகளின் புத்திரனும்
வட்டு.தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர
ஆலய தொண்டர்சபைச் செயலாளருமான
திருநிறைச்செல்வன் அகிலன் அவர்கள்
வட்டுக்கோட்டை ராதாகிருஷ்ணன் தம்பதிகளின் புத்திரி
திருநிறைச்செல்வி கம்சலா அவர்களைக் கரம்பற்றி
இல்லறத்தில் இணையும் மங்கலநாளில்
வட்டு.தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர
ஆலய பரிபாலன சபையினரும் தொண்டர்சபையினரும்
வாழ்த்தி வழங்கும்





வாழ்த்துப்பா.

மங்கல வாழ்த்து

இதயத்தாலிணைந் தின்று
மங்கல நாணேற்று மாட்சியுடன்
இல்லறத்திலிணையும் இளந்
தம்பதிகாள்; கணநாதன் கருணையினால்
இனிமையாய் வாழ்ந்திடுக.
என்றென்றும் மகிழ்வோடே
இளமையைச் சுவைத்திடுக;
வாழ்த்துகிறோம் நிறைந்து வாழ்க;

பண்பான பாவையென்று
பெயரெடுத்த, சீரோங்கும் இளநங்கை
கண்ணகையாள் அடிபோற்றும்
பெருமகளாம் ராதாகிருஷ்ணன் தம்பதியர்
வண்ணமாய் பெற்றளித்த
'கம்சலா' வின்று இல்லறத்தின் துணையாய்
விண்முட்டும் புகழ்சேர்க்க
இணைகின்ற வேளையிலே வாழ்த்துகிறோம்.

தொல்பதி வட்டூரின் தெக்கணப்பாய்
உறைகின்ற உத்தமி கண்ணகியாள்
நல்லடியான்; இராப்பகல் நோக்காது
சேவையாற்றும் தொண்டாளன், சைவ
நல்நெறி வாழ உழைத்திடு பற்றாளன்.
நாகலிங்கத் தம்பதியர்தந்த புத்திரன்
வல்லவனாம் "அகிலன்" மணமகனாய்
இல்லறத்தில் இணைகையிலே வாழ்த்துகிறோம்.

அம்மாவென்றே உலகழைத்து
ஆனந்தித்து மகிழ்கின்ற
கண்ணகாம்பிகா சமேதராய், அருள்சுரக்கும்
கண்ணலிங்கேஸ்வரப்பெருமான்
பூங்கழல்கள் போற்றி வாழ்த்துகின்றோம்.
பேறெல்லாம் பெற்றே நீடுவாழ்க;
விண் சேர்புகழோடே நிகரற்று
வளம்நிறைந்து நீடுவாழ்க;

"வாழ்க வளமுடன்"

"அன்னையின் அருள் மகத்தானது"

பரிபாலன சபையும்
தொண்டர் சபையும்

Design by:-
Micro Tower Computer Printing Service
Tellippalai Rd, Vaddukoddai.
TP. No. 077 3053168, 077 6152065


## அரசு - புலிகள்...

வன்னி விஜயம் குறித்தும், சுனாமி அனர்த்தம் குறித்தும் பேச்சுகள்நடத்தினர். வன்னிக்குச் சென்றிருந்த பீற்றர்சன் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதுடன் கடற்கோளால் பெரிதும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் விஜயம் மேற்கொண்டு அழிவுகளைப்பார்வையிட்டார்.

இதேநேரம், புலிகளின் தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பின்போது, வெளிநாடுகளால் வழங்கப்படும் கடற்கோள் நிவாரணம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உரியமுறையில் சென்றடையவில்லை எனப் புலிகள் குற்றஞ்சுமத்தியிருந்தனர்.

இதையடுத்தே, மேற்படி சந்திப்பின்போது இந்நிதியுதவி புலிகளின் பகுதி மக்களுக்கும் சென்றடைவதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப்படவேண்டுமென நோரவேப்பிரதமர், ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளார். (ச)

## அரசாங்கத்தின்...

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்பிறஸ்கர் ஆகியோர் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்றுக்காலை 8 மணியளவில் விமானப்படைக்குச் சொந்தமான ஹெலியில் கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தை வந்திறங்கியு அவர்களை விடுதலைப் புலிகளின் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வரவேற்று அழைத்துச் சென்றார்.

சுனாமியால் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்யும் நடவடிக்கைகளில் அரசும் - விடுதலைப் புலிகளும் பொதுவான ஒரு கட்டமைப்பின்கீழ் செயற்படுவது தொடர்பான அரசின் பதிலினை நோர்வேக் குழுவினர் தமிழ்ச்செல்வனிடம் எடுத்துக்கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை தலைவர் வே.பிரபாகரனுடன் சந்தித்துக் கலந்துரையாடிய விடயங்கள் குறித்து அரச தரப்பினருடன் கலந்துரையாடியமை குறித்தும், அதற்கு அரச தரப்பின் துலங்கல்கள் குறித்தும் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு விளக்கினர்.

வெளிநாட்டு உதவிகளை பொதுவான ஒரு கட்டமைப்பின் கீழ் பகிர்ந்துகொள்வதற்கு அரசு இணங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றபோதும், விடுதலைப் புலிகளால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் பொதுக்கட்டமைப்பை உருவாக்க அரசு பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து பிரிட்டன், அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா, இந்தியா ஆகிய நாடுகளின் தூதுவர்களுக்கு நோர்வேப் பிரதிநிதிகள் நேற்று விளக்கிக்கூறியுள்ளனர். (ச)

## இந்தோனேசியாவில்...

டிசம்பர் 26 ஆம் திகதி 9 ரிச்சர்ட் அளவில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. அதேபோன்று பௌர்ணமி தினமான நேற்றும் 6.5 ரிச்சர்ட் அளவில் பெரியளவிலான பூமியதிர்வு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## பணிப்பாளர்களுக்கு பணிப்பு

சுனாமிப் பேரலை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மற்றும் அகதி முகாம்களாக இயங்கி வரும் பாடசாலைகள் யாவற்றையும் இன்று தொடக்கம் இயங்கச் செய்வதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு கல்வியமைச்சு பணித்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இதுவரை திறக்கப்படாமல் இருக்கின்ற வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளையும் இன்று முதல் திறப்பதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொள்ளுமாறு வடக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.(8)

## மாங்குள விபத்தில் இருவர் காயம்

மாங்குளத்தில் நேற்று காலை இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் -ஹயஸ் வான் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விழா ஒன்றில் கலந்து கொள்வதற்காக மோட்டார் சைக்கிளில் சென்று ராஜன் (வயது 48), ராஜேந்திரன் (வயது 31) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

(ச-19)


கண்ணீர் அஞ்சலி

22-01-2005 அன்று வீரச்சாவடைந்த
வீரவேங்கை இறையவன்
(சந்திரவதனன் கமலேஸ்வரன்)
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்

நண்பர்கள்
ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம்
துன்னாலை

(C-1038)



சுனாமியின் சீற்றத்தால் பலியாகிப்போன உடன்பிறப்பை
எண்ணி நாம் உதிர்க்கின்றோம் கண்ணீர்....



கரவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும்,
முல்லைத்தீவு கள்ளப்பாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட
திருமதி மாலினி புலேந்திரன்
அவர் பிள்ளைகளான
பு.சத்துருக்கன், பு.பவித்திரா ஆகியோரது
31 ஆம் நாள் நினைவஞ்சலி
25.01.2005
இவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

இன்று அன்னாரது கரவெட்டி இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

தாய், தகப்பன்,
கணவன், பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்

சரஸ்வதி வித்தியாலய வீதி,
கரவெட்டி வடக்கு,கரவெட்டி

(C/1037)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.